நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



வள்ளலென வந்தமுரு கையா - எங்கள்
மனமான மயில்மீது வரவேணும் ஐயா
தள்ளரிய தைப்பூசம் என்று - நாங்கள்
தமிழ்பாடி வருகின்றோம், வரவேற்பாய் ஐயா.

பிப்ரவரி 1990

உ

முதல் ஆண்டு நினைவாஞ்சலி



தேவகோட்டை முத்து. கரு. வெ. அள. கருப்பஞ் செட்டியார் - சிகப்பி ஆச்சியின் மகளும் KR. முத்தையா செட்டியார் அவர்கள் தங்கையும் தேவகோட்டை சி. எ, மு. சிதம்பரம் செட்டியார் மனைவியுமான

வாழ்வரசி முத்துலெட்சுமி ஆச்சி

மறைவு : 12—1—1989

இறந்தனை என்று சொன்னால்
ஏற்றிட இதயம் இல்லை
மறந்தனை என்று சொன்னால்
மனத்துயர் அளவே இல்லை
பறந்தனை உலகை விட்டு
படைத்தவன் உந்தன்
அறந்தனை உணர்த்துதற்காய்
அழைத்தனன் சென்று விட்டாய்
என்றும் துணையிருந்தே
எங்கள் குலம் காத்திடுவீர்

என்றும் தங்கள் நினைவை மறவாத

டாக்டர் M. CT. ஏகப்பன் (மகன்)
டாக்டர் Y. முத்துலெட்சுமி (மருமகள்)
M. CT. மீனாட்சிசுந்தரம் (A M I E) (மகன்)
V. செல்வலெட்சுமி (மகள்)
SM. வள்ளியப்பன் (மருமகன்)
மற்றும் பேரன், பேத்திகள்.

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9

ஒலி 1

சுக்ல

தை

பிப்ரவரி

1990

மதியால்வித் தகனாகி மனதாலுத் தமனாகிப்
பதிவாகிச் சிவஞான பரயோகத் தருள்வாயே
நிதியேநித் தியமேயென் நினைவேநற் பொருளாயோய் ?
கதியேசொற் பரவேளே கருவூரில் பெருமாளே.

— அருணகிரிநாதர்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

ஆண்டுச் சந்தா ரூ. 24-00   டெபாசிட் சந்தா ரூ. 200-00

திருமண அமைப்பு மையம்

நகரத்தார் பெருமக்களின் பிரச்னைகளில் முன்னுரிமை கொடுத்துக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்னை திருமணம் ஆகும். மாப்பிள்ளைகளைப் பெற்றிருப்பவர்கள் தகுந்த பெண்கள் கிடைக்காமலும் பெண்களைப் பெற்றிருப்பவர்கள் தகுந்த மாப்பிள்ளைகள் கிடைக்காமலும் பெரிதும் தவிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குக் கட்டணம் ஏதும் இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் தொண்டாற்ற கீழச்சிவல்பட்டியில் 15–12–89 அன்று திருமண அமைப்பு மையம் ஒன்று தொடங்பெற்றுச் செயலாற்றி வருகிறது.

அஞ்சலில் முழு விவரங்களையும் தெரிவித்தால் அமைப்பாளர்கள் அவற்றைப் பதிந்து வைத்துக் கொண்டு தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பார்கள். ஆண்டு ஒன்றுக்கு பத்துத் திருமணங்களுக்குக் குறையாமல் பேசி முடித்துக் கொடுக்க வேண்டும் என்பதனை அவர்கள் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள்.

குடும்பத் தலைவரின் பெயர், முகவரி, வேலை அல்லது தொழில் விவரம், கோவில் பிரிவு, குடும்பத்தவர் பெயர்கள் விவரம், மாப்பிள்ளை அல்லது பெண்ணின் பெயர் வயது, படிப்பு, வேலை, சம்பளம் பிற விவரங்களுடன் ஜாதகம் பார்ப்பதுண்டா, இல்லையா என்கிற விவரம், பெண் வீட்டாரால் மாப்பிள்ளைக்குக் கொடுக்க விரும்பும் நகை, தொகை விவரம்-மாப்பிள்ளை வீட்டாரானல் பெண் வீட்டாரிடம் எதிர்பார்க்கும் நகை, தொகை விவரங்களைத் தெரியப்படுத்தினுல் நல்லது, என அமைப்பாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

விவரங்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம் :-

திரு. கவிஞர் சோம.
சிவப்பிரகாசம், எம். ஏ.,
அமைப்பாளர்,
திருமண அமைப்பு மையம்,
2/73, அம்மன் சன்னதி,
கீழச்சிவல்பட்டி-623 205

திரு முரு. சுப. சொக்கலிங்கம்,
அமைப்பாளர்,
2, B. B. ரோடு,
பங்கஜம் காலனி,
கணேஷ் தியேட்டர் அருகில்,
மதுரை-625 009

தம்பிக்குத் துணை !

வி. என். சிதம்பரம் அவர்களை நான் ''தம்பி'' என்று அழைப்பேன். அவர்கள் மிகப் பெரிய நிலைக்கு வந்த பிறகும் கூட, என்னை அண்ணனாக நினைத்து மரியாதை தருகிறார்கள். சிறுவயதில் வி. என். சிடி. சினிமாவுக்குப் போனால் அவர் என் கூடத்தான் போகவேண்டும் என்று அவர்கள் தாயார் கூறுவார்கள். ஏன் தெரியுமா? திரைப்படக் கொட்டகையில் யாராவது ஏதாவது சொல்லிவிட்டால் சிதம்பரம் அவர்கள் கொட்டகையையே விலைபேசி விடுவார். அப்படிச் செய்யாமல் தடுக்கவே என்னோடு அனுப்புவார்கள்.

(மகிபாலன்பட்டி சி. ராம. நாகப்ப செட்டியார் அவர்கள் 5-1-90 அன்று தம் மணி விழாவில் கூறியது.)

உழைப்பால் உயர்ந்தவர்

பாங்க் ஆஃப் மதுரை, தலைமை அலுவலகத்தையும் மூன்று கிளைகளையும் பெற்றிருந்த போது (1956ல்) அதில் எழுத்தராகச் சேர்ந்த திரு. சுப. சபாபதி, படிப்படியாக உயர்ந்து இன்று அதன் தலைவராகவும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பொறுப்பேற்றிருப்பது அவருடைய திறமையோடு கூடிய கடின உழைப்புக்குச் சான்றாகும்.

பாங்க் ஆஃப் மதுரையில் 1956 முதல் பல்வேறு பொறுப்



புக்களில் பணியாற்றிய இவர், 1981ல் உதவிப் பொது மேலாளராகவும் 1984ல் பொது மேலாளராகவும் பதவி உயர்வு பெற்றார். இவரது சிறந்த ஒப்பற்ற பணியைக் கண்ட இயக்குநர் குழு, 1986 ஜூனில் இவரைத் தலைமைப் பொது மேலாளராக அமர்த்தியது. 18-12-89 அன்று இவர் தலைவராகவும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியதாகும். அவருக்கு நமது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. சபாபதி வங்கித் துறை தொடர்பான பல மாநாடுகளிலும் பல பயிற்சி முகாம்களிலும் கலந்து கொண்டிருக்கிறார். அந்நியச் செலாவணி தொடர்பாக 1984ல் தெய்ப்பி, தெய்வானில் நடைபெற்ற அகில உலக மாநாட்டிலும் கலந்து கொண்டிருக்கிறார். தனியார் துறை வங்கி நிர்வாகிகள் மேற்கொண்ட மாநாடுகளில் அதிக அக்கறையுடன் கலந்து கொண்டு பிரச்னைகளை ரிசர்வ் வங்கிக்கும் அரசு நிறுவனங்களுக்கும் எடுத்துச் சென்றிருக்கிறார்.

இவர் பாங்காக், மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்.

திரு. சுப. சபாபதி அரண்மனை சிறுவயலைச் சேர்ந்தவர். B. Com பட்டதாரி. இவருக்கு மனைவி திருமதி சரோஜா ஆச்சியும் ஒரு புதல்வனும் நான்கு புதல்விகளும் உள்ளனர்.

முனைவர் தமிழண்ணலுக்கு யு. ஜி. சி. சிறப்பு விருது

பல்கலைக் கழக மான்யக் குழு (U G C) பதினான்கு அறிஞர்களுக்குச் சிறப்பு விருதுகளை வழங்கியுள்ளது. இவர்களுக்குச் சிறப்பு நிலைப் பேராசிரியர் (Emeritus Fellowship) என்ற விருதை அளித்துள்ளது.

இந்தப் பதினான்கு பேரில் மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த முனைவர் இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்) இதே பல்கலையைச் சேர்ந்த முனைவர் ஜி. ஆர். சர்மா (தெலுங்கு) ஆகியோரும் அடங்குவர்.

இந்த விருது பெற்ற பதினான்கு பேருக்கு மாதம் 4,000 ரூபாய் கௌரவ ஊதியமும் ஆண்டுக்கு ரூ. 10,000 மான்யமும் உண்டு. இது தவிர ஓய்வுகால அனுகூலங்களும் கிடைக்கும். இரண்டாண்டு காலத்துக்கோ அல்லது 65 வயது ஆகும் வரையோ (எது முந்தைய -தோ அது பொருந்தும்) இவர்கள் பதவி வகிக்கலாம்.

பல்கலைக் கழக மான்யக் குழுவின் பல்வேறு குழுக்களில் பணியாற்றவும் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு மூத்த நிலைப் பேராசிரியர் என்கிற முறையில் வழிகாட்டியாக இருந்து அவர்களுக்கு ஆலோசனை கூறவும் இந்தச் சிறப்பு நிலைப் பேராசிரியர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். மேலும் இவர்கள் தாம் விரும்புகின்ற எந்தத் துறையிலும் சுதந்திரமாக ஆராய்ச்சி நடத்தவும் நூல்களை எழுதவும் வசதியளிக்கப்படுகிறது.

எட்டு முழ வேட்டியும் நான்கு முழ வேட்டியும் !

என் தந்தையார் சி. ராம. இராமசாமி செட்டியார் அவர்கள் ஈப்போவில் வாணிகம் செய்து கொண்டிருந்த காலத்தில் சிறு பையனாக இருந்த நான், அங்கே சென்றேன். மற்றவர்களைப் பார்த்து நயமான எட்டு முழ வேட்டி கட்டிக்கொண்டிருந்தேன். ஒருநாள் என் தந்தையார் என்னை அழைத்தார்கள். ''நாகப்பா! இது சம்பாதிக்க வந்த ஊர். இங்கே சிக்கனமாக இருந்து சம்பாதித்து ஊருக்குக் கொண்டு செல்ல வேண்டும். எனவே இங்கே எட்டு முழ வேட்டி கட்டக்கூடாது'' என்றார்கள். 'சரி' என்று நான் எட்டு முழ வேட்டியை மாற்றி நான்கு முழ வேட்டி கட்டிக்கொண்டேன். பிறகு ஊருக்கு வந்தேன். மகிபாலன்பட்டியில் இருந்தபொழுது எட்டு முழ வேட்டி கட்டினேன். மீண்டும் என் தந்தையார் என்னை அழைத்து ''நாகப்பா! இது சம்பாத்தியமில்லாத ஊர். இங்கே எட்டு முழ வேட்டி கட்டலாமா?'' என்றார்கள். அன்றுமுதல் நான் பெரும்பாலும் நான்கு முழ வேட்டியையே கட்டி வந்தேன். அந்தச் சிக்கனம் இன்று பல அறப்பணிகள் செய்யத் துணையாயிருக்கிறது.

(மகிபாலன்பட்டி சி. ராம. நாகப்ப செட்டியார் அவர்கள் 5-1-90 அன்று தம் மணி விழாவில் கூறியது.)

எனது வெளிநாட்டு அனுபவங்கள்



வி.என்.சிதம்பரம்

—49—

இலண்டனில் முருகன் கோவிலுக்குச் சென்றோம். அந்தக் கோவில் ஒரு கார் ஷெட் அளவில் இருந்தது. அமெரிக்காவைப் போல அங்கு பெரிய அளவில் கோவில்கள் இல்லை.

இலண்டனில் 'டியூப் டிரெயின்' என்று சொல்லப்படுகிற பாதாள இரயில் போக்குவரத்து மிகவும் வசதியானது. அது மிக வேகமாகப் போகக்கூடியது. அதில் பயணம் செய்வது வித்தியாசமான அனுபவம். அந்த இரயிலுக்குள் இலண்டன் நகரின் வரை படத்தை வைத்திருக்கிறார்கள்.

இலண்டனில் சில பகுதிகளைப் பார்த்தால் வட இந்தியாவில் இருக்கிற உணர்வு ஏற்படும். சௌத்தால் என்ற பகுதிக்குச் சென்றால் அங்கு அனைவரும் வட இந்தியர்களாக இருப்பார்கள். அங்கு அவர்களுடைய கடைகள் அதிகம்.

ஆங்கிலேயர்கள் எப்படி உலகமெங்கும் பரவினார்களோ அதேபோல இந்தியர்கள் இலண்டனில் நிரந்தரமாகத் தங்கிவிட்டார்கள். சீக்கியர்கள் அங்கு பெட்ரோல் பங்க் உரிமையாளர்களாக இருக்கிறார்கள். ஜவுளி, போட்டோ காமிரா, ஸ்போர்ட்ஸ் முதலிய கடைகளையும் வைத்திருக்கிறார்கள். டாக்

ஸிகள் ஓட்டுகிறார்கள். அங்கு ரெஸ்டாரெண்டுகளை பஞ்சாபி கள் அதிகம் நடத்துகின்றனர்.

இலண்டனில் ஒரு இடத்தில் மெழுகில் பொம்மைகளாகச் செய்து வைத்திருக்கிறார்கள். அந்த இடத்திற்கு மேடம் டுசாட் என்று பெயர். முக்கியமான உலகத் தலைவர்கள், இலண் டன் அரச குடும்பத்தினர், பிர பல பாடகர்கள், விளையாட்டு வீரர்கள் முதலிய அத்தனை பேர்களையும் மெழுகு பொம் மைகளாகச் செய்து வைத்திருக் கிறார்கள். மெழுகு பொம்மை யோடு போட்டோ எடுத்துக் கொள்ளலாம். 'பொம்மை' என்று சொல்ல முடியாத அள விற்கு அவை தத்ரூபமாக இருக் கின்றன. அவை பார்க்க வேண் டிய காட்சிகள். நமது நாட்டுத் தலைவர்கள் மகாத்மா காந்தி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி யின் மெழுகு சிலைகளைப் பார்த்தபோது இந்தியன் என்ற முறையில் நான் பெருமிதம் கொண்டேன். டென்னிஸ் வீரர் ஜான் மெக்கன்ரோ பொம்மை அருகே நின்று படம் பிடித்துக் கொண்டேன்.

ஷேக்ஸ்பியர் வாழ்ந்த இடத் தைப் பார்த்தோம். இலண்டன் அரண்மனை வாசலில் காவலர் கள் சிலைபோல் நிற்பது, அழ காகவும் ஆச்சரியமாகவும் இருக் கிறது.

முதன் முதலில் தயாரித்த காரிலிருந்து இன்று தயாரித் துள்ள கார் வரை ஒரு இடத் தில் 'எக்சிபிஷன்' வைத்திருக் கிறார்கள். பழைய கார்களைப் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கிறது.

சென்னை ஸ்பென்சர் கட் டிடம் போலவே அங்கு கட்டி டங்கள் காணப்படுகின்றன. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கும் இலண்டன் இர



இலண்டன் வாக்ஸ் மியூசியத்தில் உள்ள டென்னிஸ் வீரர் ஜான்மெக்கென்ரோ மெழுகு பொம்மையுடன் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள்.

யில் நிச்சயத்திற்கும் வித்தியாசமே இல்லை. சில இடங்களில் மாடிக் கட்டிடம் கட்ட அரசே தடை விதித்து பழமையைக் காப்பாற்றுகிறது.

இலண்டனிலிருந்து இரயில் மூலம் ஸ்காட்லாண்டு சென்று ஒருநாள் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தோம். அங்கு பழைய அரண்மனை இருக்கிறது. அது பார்க்க வேண்டிய அரண்மனை. வெளிநாட்டினர் காமிராவும் கையுமாகக் காட்சி அளிக்கின்றனர். இரயிலில் இரண்டாவது வகுப்பே மிகவும் வசதியாக இருக்கிறது.

நாங்கள் அங்கிருந்தபோது விம்பிள்டன் டென்னிஸ் டோர்னமெண்டு நடந்தது. எனக்கு டென்னிஸ் ஆர்வம் இருந்ததால் அதைப் போய்ப் பார்த்தேன். அங்கு டி.வி. வசதி பெருமளவு இருந்த போதிலும் டென்னிஸ் மாட்ச் பார்ப்பதற்கு இங்கிலாந்து ராணி, பிரதமர் அனைவரும் நேரில்வந்து கண்டு களிக்கின்றனர்.

(வளரும்)

புத்தரின் உபதேசம்

ஜீவகன் என்ற புகழ் வாய்ந்த மருத்துவனின் சகோதரி சிரீமா. அவள் அழகு, அறிவு இரண்டிலும் சிறந்தவள். அவளிடம் புத்தரின் சீடன் ஒருவன் உணவு ஏற்பது வழக்கம். ஒரு நாள் தவறுதலாக அவன் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்து விட்டான். வந்தது வினை! தன்னிலை இழந்தான்.

சில நாட்களில் சிரீமா இறந்துவிட்டாள். புத்தர் தம் சீடர்களுக்குப் பாடம் புகட்ட விரும்பினார். அவள் இறந்த மறுநாள், சீடர்களுடன், புத்தர் அவள் இல்லம் சென்றார். ஒரு பெரிய அறையில் வசீகரம் அழிந்து, முகம் வீங்கி, துர் நாற்றம் வீச அவள் உடல் கிடத்தப்பட்டிருந்தது.

எதிரே நின்ற மன்னன் பிம்பிசாரனை நோக்கி, ''நம் முன் கிடப்பது யார்?'' எனப் புத்தர் கேட்டார்

''அழகி சிரீமா'' என்று பதில் அளித்தான் அரசன்.

''அவள் உயிருடனிருக்கும் போது, அவள் காலடியில் ஆயிரம் வெள்ளிகளைக் கொட்டப் போட்டியிட்டவர்கள், இன்று அதில் அரைப் பாகமாவது அளிப்பார்களா?'' என்று புத்தர் கேட்டார்.

''என் இராஜ்யத்தில், இப்பொழுது இவளை சிறிது தூரம் தூக்கிச் செல்லக்கூட யாரும் வரமாட்டார்கள்,'' என்றான் மன்னன்.

''இவ்வுலகில் நித்யமானது அநித்யமே'' என்று பகவான் புத்தரின் உபதேசம் எல்லோர் உள்ளத்திலும் ஆழமாய்ப் பாய்ந்தது.

ஆதாரம்: புத்தர் உபதேசங்கள்.

— மேலைச்சிவபுரி முத்துராமன்

திருச்சூர்.

சபாபதி, தமிழண்ணல் பாராட்டு விழாவில்...

திரு. சபாபதியும் திரு. தமிழண்ணலும் இரண்டு கலசங்கள். உழைத்தால் முன்னேறலாம் என்பதற்கு இவர்கள் இருவரும் எடுத்துக்காட்டு.

திரு. சபாபதிக்குப் பல இடங்களில் பாராட்டுக் கிடைத்தாலும் இது சிறப்புக்குரியது. காரணம் இது மீனாட்சி அம்மை அளிக்கக் கூடிய பாராட்டாகும்.

புகழைத் தேடி ஓடாதவர் தமிழண்ணல், மைய அரசுக்குத் தெரிந்த அளவு மாநில அரசுக்கு தமிழண்ணலைப் பற்றித் தெரியவில்லை.

— பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம்

நானும் சபாபதியும் வகுப்புத் தோழர்கள். சபாபதியின் காலம் பொற்காலம். இவருக்கு ஆணவம், அகங்காரம், கர்வம் போன்ற எதுவுமே இல்லை.

அரசுப் பின்னணி, ஜாதிப் பின்னணியில்லாமல் முன்னுக்கு வந்தவர் தமிழண்ணல்.

— முனைவர் ச. மெய்யப்பன்

தலைவர் பதவிக்கு மூன்று பேருக்குப் பதிலாக சபாபதி அவர்களின் பெயர் மட்டும் ரிசர்வ் வங்கிக்குச் சிபாரிசு செய்யப்பட்டது. எங்களில் ஒருவர் எங்களது வங்கிக்குத் தலைவராக வந்ததில் எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி.

— பூமி. சுப்பிரமணியன்

எனக்கு முன்பு, பாங்க் ஆஃப் மதுரையில் சேர்ந்த ஆறு பட்டதாரிகள் இப்போது பணியில் இல்லை. எனவே தலைவர் பதவி எனக்குக் கிடைத்திருக்கிறது.

தொழிலில் இருக்கும் நன்மை வேலை வாய்ப்பில் இல்லை. எனவே தொழிலே மிகச் சிறந்தது.

— சுப. சபாபதி

மதுரை வங்கியையும் தமிழ் வங்கியையும் (தமிழண்ணல்) தோற்றுவித்தவர் கலைத்தந்தை. கலைத் தந்தையால் தேர்ந்தெடுக்கப் பெற்றது ஒன்றுதான் நான் வாழ்க்கையில் பெற்ற பேறு. சிபாரிசு எனக்கு எப்பொழுதும் ஒத்து வராது. நகரத்தார் இனத்தை நான் மறக்காமல் இருப்பேன்.

— முனைவர் தமிழண்ணல்

(மதுரை நகரத்தார் சங்கம் சார்பில் நகர விடுதியில் 29—1—90 அன்று மதுரை வங்கியின் புதிய தலைவர் சுப. சபாபதி அவர்களுக்கும் முனைவர் தமிழண்ணல் அவர்களுக்கும் நடைபெற்ற பாராட்டு விழாவில் கேட்டவை)

தொகுப்பு: "எல்லெஸ்'

வீர வரலாறு படைத்த காரைக்குடி இராம. சுப்பையா

தமிழக அரசியலைப் பொறுத்தவரை காரைக்குடி இராம. சுப்பையா அவர்களை அறியாதவர்கள், தெரியாதவர்கள் இருக்க முடியாது. 'அரசியலா? வேண்டாம்- அது நமக்குச் சரிப்பட்டு வராது' என இப்போது நம்மவர்கள் ஒதுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இராம. சுப்பையா அவர்கள் சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என 50 ஆண்டுகள் அரசியலில் உழன்று பல தொல்லைகளைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்களது வரலாறு, வீரமிக்கதாகும்.

இராம. சுப்பையா அவர்கள் அரிமளத்திலிருந்து காரைக்குடிக்கு சுவீகாரம் வந்தவர்கள். (அரிமளம் அ. செ. பழ. பழநியப்ப செட்டியார் - சிட்டாள் ஆச்சியின் இரண்டாவது புதல்வரான இவர்கள் காரைக்குடி முத்துப் பட்டணம் அழ. சா. ராம, மு. ராம. இராமசாமிச் செட்டியார் - சிகப்பி ஆச்சிக்கு பிள்ளை வளர வந்தார்கள்), இளையாத்தக்குடி பட்டினசாமி பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் திண்ணைப் பள்ளியில் ஏட்டுக் கல்வி கற்றவர்கள். 12 ஆவது வயதில் கை பழக பர்மாவுக்குச் சென்று இரண்டு ஆண்டுகள் அங்கு பணியாற்றி, பின் தொழில் பிடிக்காமல் அரிமளம் திரும்பினார்கள். அரிமளத்தில் சொ. முருகப்பா அவர்களின் மேடைப் பேச்சு இவர்களது வாழ்விற்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

இராம. சுப்பையா அவர்களை சென்னை விருகம்பாக்கம் ஏவி. எம். நகரில் 21-10-89 அன்று இரவு சந்தித்தேன். தள்ளாத வயதிலும் (வயது 81) அவர்கள் நமது ''நகரத்



தார் குர'' லுக்கு ஆர்வமுடன் பேட்டியளித்தார்கள்.

சந்திப்புத் தொடங்குகிறது....

''அரசியல் ஈடுபாடு உங்களுக்கு எப்படி ஏற்பட்டது? கொஞ்சம் சொல்லுங்களேன்....?''

''நான் அரிமளத்தில் இருந்தபோது சொ. முருகப்பா அவர்கள் வந்தார்கள். அவர்கள் அங்கு ஒரு கூட்டத்தில் பேசிய பேச்சு, அவர்களது செயலாற்றல் எல்லாம் எனக்குப் பிடித்து விட்டது. நான் அவர்கள் பின்னுலேயே சென்றேன். அவர்கள் கலப்பு மணம், சீர்திருத்தத் திருமணம், விதவா விவாகம் ஆகியவற்றை ஆதரித்துச் செட்டிநாடு முழுவதும் பிரசாரம் செய்தார்கள். நானும் என் மனைவியும் அவர்களுடன் பிரசாரத்தில் ஈடுபட்டோம்.

''1930ல் அவர்கள் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைக் காரைக்குடிக்கு அழைத்து வந்தார்கள். அப்போது முதன் முறையாக நான் பெரியாரின் பேச்சைக் கேட்டேன். அவர்களது பேச்சு என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. அது முதல் நானும் என் மனைவியும் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து அந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடு பட்டோம்.''

(சொ. முருகப்பா அவர்களின் மாமனுரான காரைக்குடி அழ. சா. ராம. மு. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்களுக்குச் சுவீகாரம் சென்ற இராம. சுப்பையா அவர்கள் சொ. முருகப்பா அவர்களின் சிறிய தாயார் மகளான விசாலாட்சி ஆச்சியை 1930ல் மணம் செய்துகொண்டார்கள்.)

''அரசியல் என்கிறபோது அதில் போராட்டங்கள், கலவரங்கள் என்று வருமே, அப்படி உங்கள் வாழ்க்கையில் சந்தித்தவை பற்றி....?''

''நன்ருகக் கேட்டீர்கள்... குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சி.. நாகப்பட்டினத்தில் என் மனைவி சுயமரியாதை மாநாட்டைத் துவக்கி வைத்தார். அப்போது செட்டிநாட்டில் அதற்குப் பலத்த எதிர்ப்பு இருந்தது. நாங்கள் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்ததற்காக எங்களை நம் சமூகத்தை விட்டுத் தள்ளிவைக்க முயற்சி செய்தார்கள். ஆனுலும் இளைஞர்களின் ஆதரவால் நாங்கள் தப்பித்துக் கொண்டோம்.''

''நான் 15 ஆண்டுகள் சுயமரியாதை இயக்கத்திலிருந்து அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டேன். பின்னுல் அது திராவிடர் கழகமாக மாறியது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சம உரிமை வழங்க வலியுறுத்தி நான் காரைக்குடியில் ஆதி திராவிடர் மாநாடு ஒன்றை நடத்தினேன். இதற்குக் காரைக்குடியைச் சேர்ந்த ஏ. வி. பிஎல். சிதம்பரம் செட்டியார், எம். ஆர்எம். பெரியணன் செட்டியார், நா. கு. இராமசாமிச் செட்டியார் போன்ற கோடீசுவரர்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். மாநாடு நடத்த இடம் கொடுக்கத் தடை செய்தார்கள். கொட்டகையில் நெருப்பு வைத்துக் கொளுத்தப் போவதாகப் பயமுறுத்தினுர்கள். அவற்றையெல்லாம் மீறி பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி, மாயவரம் நடராஜன், நாகை காளியப்பன், இன்னும் பலரைக் கொண்டு எதிர்ப்புக் கூட்டம் போட்டு சர் ஆர். கே. சண்முகம் செட்டியாரைத் தலைவராகக் கொண்டு மாநாட்டைச் சிறப்பாக நடத்தினேம். மாநாட்டை நடத்தவிடாது ஏ. வி. பிஎல். சிதம்பரம் செட்டியார் தடை உத்தரவு வாங்கி வந்தார். நாங்கள் மதுரையில் மாவட்ட நீதிமன்றத்தில் வெள்ளைக்கார நீதிபதியிடம் அனுமதி பெற்று நடத்தினேம்.''

''நீங்கள் எப்போது தி. மு. கழகத்தில் சேர்ந்தீர்கள்?''

''நான் 1951ல் தி. மு. கழகத்தில் உறுப்பினராகி செட்டிநாட்டில் (இராமநாதபுரம் மாவட்டத்தில்) தி. மு. க. வை வளர்த்தேன். தி. மு. க. வின் முதல் மாநாடு சிவகங்கையில் நடந்தது. பிறகு விருதுநகர், காரைக்குடி ஆகிய நகரங்களில் நடத்தினோம். நான் மாநாட்டின் செயலாளர் பொறுப்பை ஏற்றிருந்தேன். 1980 வரை நான் தி. மு. க. கழகத்தில் இருந்தேன்.''

''கல்லக்குடிப் போராட்டம் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்..?''

''1953ல் டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக மாற்றப் போராட்டம் நடந்தது. கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் முதல் அணி இரயில் மறியலை நடத்தியது. இரண்டாவது அணிக்கு நான் தலைமை. அந்தப் போராட்டத்தில் எனக்கு 3 மாதம் சிறைத்தண்டனை கிடைத்தது. மூன்றாவது அணிக்கு கவிஞர் கண்ணதாசன் தலைமை தாங்கினார்.''

இராம. சுப்பையா அவர்களின் காரைக்குடி இல்லத்திற்கு 'சமதர்ம இல்லம்' எனப் பெயர். இந்த இல்லத்திற்கு வருகைதராத அரசியல் தலைவர்கள் வெகு குறைவு. பெரியார் ஈ. வெ. ரா., அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, அன்பில் தர்மலிங்கம், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கவிஞர் கண்ணதாசன்.. எனப் பட்டியல் நீளும்.

இராம. சுப்பையா அவர்கள் 1930ல் சுய மரியாதை இயக்கத்தில் சேர்ந்ததிலிருந்து 1980 வரை - 50 ஆண்டுகள் அரசியல் வாழ்க்கை வாழ்ந்த பெருமகனாவார். இவர்கள் அரசியலுக்காக சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் வரை தன் சொந்தப் பணத்தைச் செலவு செய்திருக்கிறார்கள்.

இவர்கள் 1957ல் காரைக்குடித் தொகுதியில் - ராஜா சர் மு. அ. முத்தையா செட்டியார் (காங்.) கம்பன் அடிப்பொடி (சுதந்திரா) இருவரையும் எதிர்த்து தி. மு. கழகம் சார்பில் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டார்கள். ஆனால் வெற்றி வாய்ப்புக் கிடைக்கவில்லை.

இவர்கள் 1972 முதல் 1978 வரை 6 ஆண்டுகள் தி. மு. க. ஆட்சிக் காலத்தில் M.L.C. ஆகச் சேவை செய்திருக்கிறார்கள்.

பெருமைக்குரிய இராம. சுப்பையா அவர்கள் பெரியார் ஈ. வெ. ரா. விடத்தில் அதிக மதிப்பும் மரியாதையும் வைத்திருந்ததன் காரணமாக தி. மு. கழகம் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவர்கள் பெரியார் விருது வழங்கப்பெற்று 'கௌரவிக்கப்பட்டார்கள்.

இராம. சுப்பையா அவர்களது குடும்பத்திற்குச் சொந்தமான கனிமுத்துப் பதிப்பகம் இவர்களது வரலாற்றை ''நானும் என் திராவிட இயக்க நினைவுகளும்'' என்ற பெயரில் நூலாகத் தயாரித்து இவர்களது பிறந்த நாளில் (14-11-1986) வெளியிட்டுள்ளது. முதல் நூலை கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வெளியிட திராவிடர் கழகத்தலைவர் திரு. கி. வீரமணி பெற்றுக் கொண்டார்.

இராம. சுப்பையா அவர்களது துணைவியார் திருமதி விசாலாட்சி அவர்கள் 1987ல் காலமானார்கள். இவர்களுக்கு திருவாளர்கள் எஸ்பி. முத்துராமன் (திரைப்பட இயக்குநர்) பொறியாளர் எஸ்பி. செல்வமணி, எஸ்பி. சுவாமிநாதன், முனைவர் பேராசிரியர், எஸ்பி. வீரபாண்டியன் என நான்கு புதல்வர்களும் திருமதி சித. கனகலெட்சுமி என்கிற புதல்வியும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

சந்திப்பு: எல். சுந்தரம்

உங்கள் குரல்

''நகரத்தார் குரல்'' ஜனவரி '90 இதழில் வெளிவந்த பேட்டிகள், கட்டுரைகள் எல்லாமே சிறப்பாக இருந்தன. புத்தாண்டு இதழே புதுப் பொலிவுடன் திகழ்ந்தது.

சொ. இராமையா
திண்டுக்கல்

வாழ்க்கையில் உயர்வு பெற்ற பெரிய புள்ளிகளை நேர்முகம் கண்டு வெளியிடுவது சிறப்பு.

எஸ். கண்ணப்பன்
சென்னை

திரு. லேனா தமிழ்வாணனின் பேட்டியில் பல நல்ல செய்திகளைத் தெரிந்து கொண்டேன். பதிப்பகங்களைப் பற்றி அவர் கூறியிருப்பது பெருமை தருகிறது.

ஆர். வெங்கடாசலம், சேலம்

''நகரத்தார் குரல்'' ஜனவரி '90 இதழ் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. திரு. எல். கிருஷ்ணன் அவர்களைப் பேட்டி கண்டு அவர்களைப் பற்றி முழு விவரங்களையும் அளித்த எல். சுந்தரம் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

ஆ. முத்துராமன்
திருச்சூர்

நகரத்தார் சமூக இதழ்களில் ''நகரத்தார் குர''லின் தொண்டு பாராட்டுக்குரியது. வேறு எந்த இதழும் செய்யாத செய்ய முடியாதவற்றை ''குரல்'' சிறப்பாகச் செய்து வருகிறது. நம்மினப் பெரியவர்களை, முக்கிய புள்ளிகளை இனங்கண்டு அவர்களது செயலாற்றல்களை விரிவாக, நெளிவாக வெளியிட்டுவருவது பெரும் சிறப்புக்குரியது. வாழ்க, வளர்க 'குரல்'.

எஸ்பி. இராமநாதன்
புதுக்கோட்டை

'நானும் ஒரு நகரத்தார்'...

தமிழண்ணல்

2. செட்டும் சிக்கனமும்

அன்று பிற்பகல் யான் விமானத்திற்குப் புறப்படவேண்டிய அவசரம். ஒரு கடையைவிட்டு வெளியேறும்போது, பணம் எடுக்கப் பையைத் துழாவுகிறேன். முன்பு கைக்கு அகப்படாத 50 சதம்—1/2 வெள்ளி கையில் சிக்கி, வெளிவந்து மின்னுகிறது. ''அப்படியானல் நேற்று கடையில் அரை வெள்ளி யார் கொடுத்தார்?'' செட்டியார் 'நான்தான்' என்று சொல்ல, நான் நினைவு கூர்ந்து ''நான்கு வெள்ளிதானே திருப்பித் தந்தேன். இந்தாருங்கள் அந்த அரை வெள்ளி'' என்று தர, அவரும் அதை மறுக்காமல் வாங்கிக்கொண்டார். இதைப் பார்த்த மூன்றாமவர்—அந்தப் பேராசிரியர் என்னையும் அவரையும் பார்த்தார். அந்தப் பார்வையில், 'என்ன இந்தச் செட்டியார்கள், அரை வெள்ளிக்குக்கூட மிகக் கணக்காக இருக்கிறார்களே' என்ற தொனிப்பு இருந்தது. முன்பாயிருந்தால் அதற்காக நான் வெட்கப்பட்டிருப்பேன். இப்போது 'நானும் ஒரு நகரத்தார்' என்ற நினைப்பில், அதை நான் ஒரு கவுரவமாகவே உள்ளூற எண்ணிக் கொண்டேன்.

உண்மையாக எண்ணிப் பார்த்தால் எனக்கும் அவருக்கும் உள்ள உறவில், கொடுக்கல் வாங்

கலில் அது "காற்காசு பெறாது தான்"! ஆனால் நாம் பணத்தை அப்படி நினைப்பதில்லையே; காற்காசு, அரைக்காசு என்று புறக்கணிப்பதில்லையே. "அன்றைக்கு வந்திட்ட அம்மா இலக்குமி நீ என்றைக்கும் நீங்காதிரு" என்ற பாடுவார் வாக்குப் பலிப்பதற்கு, இந்தச் செட்டும் சிக்கனமுமே காரணங்களாகும். தாய் மகளிடமும் தந்தை மகனிடமும் மக்கள் பெற்றோரிடமும் கணக்குச் சொல்லிச் சரிபார்த்து நடக்கும் சமுகம் இது. இதைப் பலர் கேலி செய்வார்கள். எனக்குத் திருமணமாகு முன் நானும் இதையெல்லாம் கண்டபடி கேலி பேசிக் கொண்டிருந்தவன்தான்! ஆனால் என் மனைவி என்னிடமே கணக்குக் கேட்கும் நிலை வந்தபொழுது, நான் திண்டாடினேன். நான் இன்னும் திருந்தவில்லை தான்! ஆனால் நான் தவறிவிடாதிருப்பதற்கு இவ்வுணர்வு கை கொடுக்கிறது.

நான் ஆசிரியனாகிப் பிற சமூகத்தவர்களுடனேயே பழக நேரிட்டதால், என்னிடம் 'நகரத்தார் பழக்கவழக்கம்' குறைவாகிக் கொண்டே போனது. அதே போல் என்னிடம் பழகிய சிலர், நகரத்தார் சமுகத்திடம் அதிகத் தொடர்பு கொண்டிருந்ததால், அவர்களிடம் 'நகரத்தார் பண்பு' படிந்திருக்கவும் கண்டதுண்டு. வரவு செலவுக்குக் கணக்கு வைக்கும் பழக்கம் படியாமல் போன நான், ஒருமுறை என் அம்மான் மகனிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது, 'என்போன்ற குறைந்த மாத வருமானம் உள்ளவர்கட்கு இதெல்லாம் தேவையில்லை' எனக் கூறிக்கொண்டிருந்தேன். அவர் என்னுடன் தமிழ் படிக்கத் தொடங்கி, இடையில் விட்டு விட்டு, தொழிலதிபராகி இன்று நல்ல நிலையிலிருப்பவர். அவர் அன்று என்னிடம் என் வாதத்தை மறுத்து, "பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை" என்ற குறளை மறந்துவிட்டாயா?" என்று, முகத்திலறைந்ததுபோல் கேட்டார். யான் எத்தனையோ குறள்களைப் படித்தும் இதை மறந்துவிட்டேன். அவர் குறள் படிப்பதையே, இடையில் விட்டு விட்டவர். இந்தக் குறளை மட்டும் மறவாதிருந்தார். அவரது கடும் உழைப்பையும் முயற்சியையும் யான் நன்கு அறிவேன். அவர் இன்று பலருக்கும் உதவக் கூடிய, வழிகாட்டக்கூடிய பெரிய நிலையில் இருக்கிறார். எல்லாவற்றுக்கும் காரணம், அந்த அடிமனக் கோட்பாடுதான்!.. "பொருள் ஆட்சி போற்றாதார்க்கு இல்லை"!

ஒருநாள் என் மகன் என்னிடம் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பேச்சோடு பேச்சாகக் கூறினான், "சிக்கனமும் ஒரு வருமானம்தானே அப்பா!" என்று எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் ஆயிரம் பேருக்கு ஏதேதோ கற்றுக் கொடுத்திருந்தாலும், நிச்சயமாக அவன் என்னிடமிருந்து அந்த வாசகத்தைக் கற்றுக் கொண்டிருக்க முடியாது; என் மனைவி நடந்துகொள்ளும் முறையிலிருந்து ஒருவேளை அவன் அதை உய்த்துணர்ந்து இருக்கலாம்! அவளும் அந்த வாசகத்தைக் கூறியிருக்க முடியாது. பிறகு எவ்வாறு வந்தது? நகரத்தார் குலமரபு அவனுக்குள் இருக்கிறது; அது அவனுக்கு அதைக் கற்றுத் தருகிறது; அல்லது உள்ளிருந்து வெளிப்படுகிறது.

ஆம். நகரத்தார் பண்புகள் பல, நாம் அறிந்தோ, அறியாமலோ நம்முள் படிந்து போயிருக்கின்றன.

'சிக்கனமும் ஒரு வருமானம்' என்பதில் எவ்வளவு உண்மைகள் பொதிந்துள்ளன தெரியுமா? என்

போலவே வருமானமுள்ள, என் போன்ற நிலையிலிருந்த தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் என்னிடம் ஒருநாள் கேட்டார், ''ஐயா, நீங்களும் என்போலத்தானே வருமான முள்ளவராயிருக்கிறீர்; நியாயமான முறையைவிட்டுப் பிசகாமலும் வாழ்கிறீர்; பிறகு எப்படி ஒரு பெண்ணுக்குப் பல லட்சம் செலவழித்து உம்மால் திருமணம் செய்து கொடுக்க முடிகிறது?'' என்று ஒருமுறையன்று; பலமுறை கேட்டுவிட்டார் அவர்.

அவரிடம் ஒவ்வொருமுறையும் நான் சொல்வேன், ''ஐயா, அன்றாடம் நாங்கள் வாழ்வதை நீங்கள் வந்து நேரில் பார்த்தால் உண்மை விளங்கும். நாங்கள் அன்றாடம் எவ்வளவு வருமானம் வந்தாலும் எதையும் சரிவர அனுபவிப்பதில்லை. சேமிப்பு, சேமிப்பு, அடுத்த கலியாணத்திற்குச் சேமிப்பு-இவ்வாறே எங்கள் வாழ்நாள் எல்லாம் கழிகிறது. என் மனைவி, மக்கள் ஒரு பருக்கையை வீணாக்க மாட்டார்கள்; பழைய குழம்பைத் தூக்கி வெளியிலூற்றச் சம்மதிக்க மாட்டார்கள்; மூன்று நாள் கழித்து ஒருவித வாடை வந்தாலும் பழைய மோரென்று கொட்டிவிடமாட்டார்கள். நீர்-மோர் என்று வெங்காயம், கறிவேப்பிலை, மிளகாய், சீதகம் போட்டுத் தாளித்தேனும் பயன் படுத்தியே தீர்வார்கள். அதனால் முடிகிறது'' என்று!

ஆனாலும் இந்தச் சமுகத்தைச் செட்டுள்ள இனம், சிக்கனமான இனம் என்பதை மறுக்கிறேன். காரண காரியத் தோடு - சான்றுடன் நான் கடுமையாக மறுக்கிறேன். என் வாதத்தைக் கேட்டுவிட்டு, நீங்கள் முடிந்தால் என்னை மறுத்துப் பாருங்கள்! வழக்காடு மன்றம்தான் நடத்திப் பார்ப்போமே! நீங்கள் ஆயத்தமா? நீங்களும் சிந்தித்துக் கொள்ளக் கொஞ்சம் அவகாசம் தருகிறேன்.

(அடுத்த திங்கள் தொடரும்...)

நகரத்தாரே சிந்தியுங்கள்!

உ. சண்முகநாதன் B. A., கொல்லங்குடி அழகாபுரி

நம்மினத் திருமணங்களின் போது 'சீர்வரிசை' என்ற பெயரில் பெண்ணுக்குத் தேவைக்கு மேல் வெண்கலம், எவர்சில்வர், அலுமினியம், இரும்பு, மரம், பீங்கான், பிளாஸ்டிக் போன்ற பலதரப்பட்ட பொருட்களை பலர் பார்த்துப் பெருமையாகப் பேச வேண்டும் என்பதற்காக அழகாக பரப்பிக் கொடுத்து வருகிறோம்.

அன்றைக்கு, நாம் நம்பி இருந்த வெளிநாடுகள் நன்றாக இருந்தன. நாம் வசதியோடு-செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்தோம். செலவுக்கு மேல் வரவு வந்தது. எனவே தேவைக்கு மேல் நம்மால் கொடுக்க முடிந்தது. ஆனால் இன்றைக்கு நிலைமை நன்றாக இல்லை. நம்மவர்களில் பலர் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் 'நம் பெண்ணுக்கு எப்படித் திருமணம் செய்யப் போகிறோம்' என்ற கவலையில் நாளும் உருகி வருகிறார்கள்.

முன்பு நம்மில் எல்லோரும் வேலைக்குப் போவதில்லை. சொந்த ஊரிலேயே வாழ்ந்து வந்தோம். எனவே சீர்வரிசையாகப் பெற்ற பொருட்களை வீடுகளில் வைத்துப் பூட்டி அவ்வப்போது சரிபார்த்துப் பாதுகாத்து வந்தோம். திருமணங்களின் போது மட்டும் அவற்றை எடுத்துப் பரப்பிக் கொடுத்து வந்தோம்.

இப்போது நிலைமை அவ்வாறு இல்லை. நம்மில் பெரும்பாலோர் வேற்று நகரங்களிலும் வேற்று மாநிலங்களிலும் வேற்று நாடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். எனவே வயதானவர்கள் இல்லாத பல வீடுகள் பூட்டியே கிடக்கின்றன. பல வீடுகள் இடிந்து விழக் கூடிய நிலையில் உள்ளன. இந்த நிலையில் சீர்வரிசைப் பொருட்களை அவர்கள் எவ்வாறு பாதுகாக்க இயலும்?

நகரங்களில் பலர் சொந்த வீடுகளில் வாழ்ந்து வந்தாலும் இப்படிப்பட்ட சீர்வரிசைப் பொருட்களை அங்கு வைத்துப் பாதுகாக்க முடிவதில்லை.

பழங்காலத்தில் கட்டப்பட்ட தம்முடைய வீடுகளைப்போல இனிமேல் நம்மால் கட்டவும் முடியாது இருக்கிற வீடுகளைத் தான் அண்ணன், தம்பிகள், பங்காளிகள் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும். அப்படிப் பார்த்தால் பல வீடுகளில் ஒருவருக்கு அரைக்கால் பங்கு கூடத் தேறாது. இந்த நிலையில் சீர்வரிசைப் பொருட்களை எங்கு, எப்படிப் பாதுகாக்க முடியும்?

சொந்த வீடுகள் இல்லாதவர்கள், வீடுகள் இருந்தும் போதுமான அறை வசதி இல்லாதவர்கள் வாடகைக்கு வீடு பிடித்து அப்பொருட்களை அங்கு வைக்கின்றனர். அதற்கும் இப்போது ஏகக் கிராக்கி. சாமான்களுக்கும் பாதுகாப்புக் கிடையாது. வாடகையும் கூடிக் கொண்டே போகிறது.

எனவே திருமணங்களின் போது பெண்ணுக்கு அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை மட்டும் கொடுத்தால் போதுமானது. திருமணச் செலவும் குறையும். இதை வசதியானவர்கள் செயல்படுத்தினால் மற்றவர்களும் பின்பற்றுவார்கள். நகரத்தார்கள் சிந்தித்துச் செயல்படுவார்களா?

வானொலி அறிவிப்பாளர் ஜெயம்கொண்டான்

பலருக்கும் பல்வேறு திறமைகளினும் ப்பலைகள் கிடைக்கின்றன. ஆனால்... நம் திரு. ஜெயம்கொண்டானுக்கோ அவருடைய இனிமையான குரல் வளத்தால் வானொலியில் செய்தி அறிவிப்பாளர் வேலை கிடைத்திருக்கிறது.

திரு. ஜெயம்கொண்டான் மேலைச்சிவபுரியைச் சேர்ந்தவர். இவர் வேந்தன்பட்டி, வலையபட்டி ஆகிய ஊர்களில் பள்ளிக் கல்வியையும் மதுரை தியாகராசர் கல்லூரியில் புகுமுகக் கல்வியையும் கற்றார். (இப்போது ஆஸ்மானியாப் பல்கலையில் B. A. யையும் சென்னைப் பல்கலையில் M. A. (தமிழ், இலக்கியம்) யையும் அஞ்சல் வழியாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளார்.)

திரு. ஜெயம்கொண்டான் தொடக்கத்தில் மருந்துவிற்பனைப் பிரதிநிதியாக 4 ஆண்டுகள் பணியாற்றினர். சிறுவயது முதல் இவருக்கு நாடகம், கவியரங்கம், சொற்பொழிவு ஆகியவற்றில் ஆர்வம் உண்டு. இவரது நண்பர் இராமலிங்கம் என்பவரின் யோசனையின் பேரில் நாடகம் நடத்த அனுமதி கோரி இவர் வானொலி நிலையம் சென்றார். அங்கு குரல் தேர்வு (Audition) நடத்தியவர்கள் இவரது குரல் வளத்தைக் கேட்டு அதிசயித்துப் போனார்கள். உடனே இவரை வானொலி நிலையத்தில் தற்காலிக அறிவிப்பாளராக அமர்த்திக் கொண்டார்கள். இவரது பணி சிறக்கச் சிறக்க இவர் 1965ல் அங்கு நிரந்தர அறிவிப்பாளரானர்.

இவர் நேர்முக வர்ணனை செய்வதிலும் திரைப்படப் பாடல்களைத் தொகுத்து வழங்குவதிலும் செய்திகளை அறிவிப்பதிலும் சிறப்புடன் திகழ்கிறார். பேரறிஞர் அண்ணா, கர்மவீரர் காமராஜர், மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஆகியோரின் மறைவின் போது உருக்கமான இவரது நேர்முக வர்ணனைகளைக் கேட்டு அதிசயித்தவர் ஏராளம்.

இவர் வானொலிக்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளையும் 500 க்கும் மேற்பட்ட நாடகங்களையும் 300 க்கும் மேற்பட்ட உரைச்சித்திரங்களையும் தயாரித்திருக்கிறார். குழந்தைகளுக்கான நிகழ்ச்சியில் வானொலி அண்ணாவாகப் பல மாதங்கள் பணியாற்றியிருக்கிறார்.



இவரது இனிமையான குரல் வளத்தை அரசு திரைப்படங்களிலும் மதுரை திருமலை நாயக்கர் மகாலில் நடைபெற்று வரும் ஒலி-ஒளிக் காட்சியிலும் கேட்க முடியும்.

5ஆவது உலகத் தமிழ் மாநாட்டின்போது தயாரிக்கப் பெற்ற ''குமரிக் கண்டம்'' (தமிழக வரலாறு பற்றியது) படத்தில் குரல் கொடுத்து அப்போதைய தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆரால் பாராட்டப் பெற்றவர். தொலைக்காட்சி அறிமுகமான நேரத்தில் அதில் செய்தி வாசித்த பெருமையும் இவருக்கு உண்டு.

சிறந்த எழுத்தாளரான

இவர் ''பிள்ளையார் சுழி'' ''வெள்ளி மணி'' போன்ற குழந்தைகளுக்கான நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய ''சிறு கதைத் தொகுப்பு'' நூல் 1976 ஆம் ஆண்டில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தங்கப் பதக்கத்தை முதற் பரிசாகப் பெற்றது.

டி. கே. சண்முகம், சகஸ்ர நாமம், ஜெய்சங்கர், முத்து ராமன் போன்ற திரைப்பட நடிகர்களைக் கொண்டு பல நாட கங்களைத் தயாரித்துள்ள இவர், ''அரண்மனைத் தோட் டம்'' என்ற நாடகத்தை எழுதி அரங்கேற்றம் செய்துள்ளார்.

திரு. ஜெயம்கொண்டான் திரைப்பட நடிகரும்கூட. ஆமாம் இவர் அக்கரைப்பச்சை, துணிவே துணை, ப்ரியா, சத்யா, கடமை-கண்ணியம் - கட்டுப்பாடு, நல்ல வன் போன்ற எண்ணற்ற படங் களில் நடித்திருக்கிறார்.

இவர் பஞ்சு அருணாசலத் துடன் ''மணமகளே வா'' படத் தில் இணை இயக்குநராகப் பணி யாற்றியுள்ளார். தற்போது பல படங்களில் இணை இயக்குநராகப் பணியாற்றியும் வருகிறார்.

கடந்த 25 ஆண்டுகளாக சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் செய்தி அறிவிப்பாள ராகப் பணியாற்றி வரும் இவரை இவரது துணைவியார் மற்றும் உறவினர்கள் தொழில் செய்யு மாறு வற்புறுத்தி வந்தும் இவர் அதை ஏற்றுச் செயல்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது-

''வானொலி நிலைய ஆலோ சனைக் குழு உறுப்பினராக இருந்த செட்டி நாட்டரசர் மு. அ. முத் -தையாச் செட்டியார் அவர்கள் 1966 ஆம் ஆண்டு சென்னை வானொலி நிலையம் வந்தார்கள். என்னைப் பார்த்த அவர்கள் என் தோள் மீது கையைப் போட்டு அணைத்தவாறே ''நகரத்தாரிலே நீ ஒருவன் தான் வானொலியில் பணி புரிகிறாய். இது நம்மினத்திற் குப் பெருமையாக இருக்கிறது. பொருளீட்டப் போகிறேன் என்று கொண்டுவிக்கப் போய் விடாதே! உனக்கு என்ன உதவி வேண்டுமானாலும் என்னிடம் கேள்'' என்று அன்பான வேண்டு கோள் விடுத்தார்கள். நான் அவர்களிடம் எந்த உதவியும் கேட்டுப் போகவில்லை. ஆனாலும் அவர்களது வேண்டுகோளை ஏற்று நிறைவேற்றி வருகிறேன்.'' என்றார்.

சென்னை திருவான்மியூர்

நகரத்தார் சங்கத் தலைவராக இருந்து சிறந்த சேவை செய்து வரும் திரு. ஜெயம்கொண்டான் சபரிமலைக்கு 20 ஆண்டுகளாகச் சென்று சாஸ்தாவை வழிபட்டு வருகிறார். கடந்த 8 ஆண்டுகளாக பழநிக்கு வழிநடைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இவருக்கு திருமதி மீனாட்சி ஆச்சி என்கிற துணைவியாரும் நாகம்மை என்ற புதல்வியும் கனகசபை என்கிற புதல்வரும் உள்ளனர். இவருடைய புதல்வர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் B. E. (Mechanical) இரண்டாம் ஆண்டு பயின்று வருகிறார்.

நம்மினத்தவர் எவரேனும் வானொலிக்கு வரும்வரை தாம் அப்பணியை விடுவதில்லை எனக் கூறும் திரு. ஜெயம்கொண்டான், நல்ல குரல் வளம், நடிப்புத் திறன், எழுத்தாற்றல் போன்ற வற்றில் ஆர்வமுள்ள, தகுதிகளுடைய நம் இளைஞர்கள் வங்கிகளிலும் வணிக நிறுவனங்களிலும் மட்டுமே வேலை தேடி அலையாமல் வானொலி, தொலைக்காட்சி போன்ற பல்வேறு துறைகளிலும் சேர்ந்து சிறப்புப் பெற வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறார்.

''நகரத்தார் குரல்'' பற்றி அவர் கூறியபோது இதழ் சிறப்பாக இருக்கிறது எனறும் சுவையான இலக்கிய நிகழ்ச்சிகள் நிறைய இடம் பெற வேண்டும் என்றும் கூறினார்.

சந்திப்பு: நெற்குப்பை
எல். முத்துப்பழநியப்பன்



திரு. தமிழ்வாணனின் சகோதரர் தேவகோட்டை திரு. லெ. வெங்கடாசலம் செட்டியார் - திருமதி சுலோசனா ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா சிதம்பரம் நகரில் 31—12—89 அன்று உற்றார், உறவினர், பங்காளிகள் சிதம்பரம் நகரத்தார் பெருமக்கள் நண்பர்கள் வாழ்த்துக்களுடன் சிறப்புடன் நடைபெற்றது.

மதுரை நகர விடுதிக்குப் புதிய கட்டிடம்

மதுரை நகர விடுதிக்கு வடக்குச் சித்திரை வீதியில் புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது. ஏற்கனவே உள்ள பழைய கட்டிடத்தை இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டவிருக்கும் இதற்காக 25-1-90 வியாழன் காலையில் விடுதியில் கட்டிடக் கால்கோள் விழாச் சிறப்பாக நடைபெற்றது. இதில் நகரத்தார் பெருமக்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்தப் புதிய கட்டிடக் கால்கோள் விழாவில் பாகனேரி வெ. வெ. கரு. வே. மாணிக்கம் செட்டியார் அவர்களின் துணைவியார் திருமதி மா. உண்ணுமலை ஆச்சி அவர்கள் திருவிளக்கேற்றிவைத்துச் சிறப்பித்தார்கள்.

இந்தப் புதிய விடுதி சுமார் 15 இலட்சம் ரூபாய் திட்டத்தில் கட்டப்பட உள்ளதாகவும் இதுவரை சுமார் 6 இலட்சம் ரூபாய் சேர்ந்துள்ளதாகவும் ஒரு மாத காலத்தில் மேலும் நன்கொடை திரட்டி கட்டிட வேலையைத் துவக்க இருப்பதாகவும் சங்கத்தின் தலைவர் லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தப் புதிய கட்டிட நிதிக்கு ரூ. 1,11,111-00 நன்கொடை தருவதாக 11-6-87 அன்று முதல் முதலாக அறிவித்த பாகனேரி வெ. வெ. கரு. வே. மாணிக்கம் செட்டியார் அவர்கள் புதிதாக விடுதியில் வைக்கப்பெற்றுள்ள உண்டியலில் தாம் ஒரு தொகையைப் போட்டு மற்றவர்களையும் தாராளமாக நன்கொடை அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். புதிய விடுதி விரைவில் கட்டப்பெற வேண்டுமென்றும் அது ஷாஜகான் கட்டியுள்ள தாஜ்மகாலை விட எழில்மிக்கதாகவும், பார்ப்போர் வியக்கும் வண்ணம் கலை அழகுமிக்கதாகவும் அமைய வேண்டுமெனவும் அவர்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

இக்கட்டிடத்திற்கு நன்கொடை பெற வருமானவரி விலக்குப் பெற இருப்பதாகவும் புதிய விடுதிக்கு வெகு ஆழமான ஆழ்துளைக் கிணறு ஏற்படுத்தப் பெற்று தண்ணீர் வசதி தாராளமாகக் கிடைப்பதாகவும் சங்கத்தின் செயலாளர்கள் திரு. சொ. சொ. மீ. சுந்தரமும் திரு. எம். சிஎன். மாணிக்கமும் தெரிவித்தார்கள்.

பாகனேரி வே. மாணிக்கம் செட்டியார் அவர்களின் கொடை உள்ளத்தையும் ஆர்வத்தையும் பாராட்டி சங்கத் தலைவர் லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் அவர்களுக்குப் பொன்னுடை அணிவித்துச் சிறப்பித்தார்கள். தமக்கு அளிக்கப்பெற்ற பொன்னுடையை மா. அவர்கள் திரும்ப லெ. நா. அவர்களுக்கே போர்த்தி தமது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

புதிய நகர விடுதி கட்டும் வரை, மதுரை நகரவிடுதி திருப்பரங்குன்றத்தில் உள்ள விடுதியில் இணைந்து செயல்படும் என்றும் கட்டிட வேலை முழுமை பெற்றவுடன் விடுதி திரும்ப மதுரையில் செயல்படும் என்றும் தெரிவிக்கப் பெற்றது.

கட்டிடக் கால் கோள் விழா நிகழ்ச்சிச் செலவுகளை பாகனேரி வே. மாணிக்கம் செட்டியார் அவர்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள்.



மணிவண்ணன் மடல்..

2. பெண், வாழப்பிறந்தவள்!

அன்புள்ள ஆச்சிக்கு,

வணக்கம். உங்கள் கடிதம் கிடைத்தது. உங்கள் மகள் கல்யாணிக்குப் பெண் குழந்தை பிறந்திருப்பதைத் தெரிவித்திருக்கிறீர்கள். மிக்கமகிழ்ச்சி. உங்கள் பேர்த்தி வாழ்க பல்லாண்டு.

''அரசு பிறந்திருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்; பொட்டையாய்ப் பிறந்து விட்டது'' என்று ஒருவாய், குறைப்பட்டிருக்கிறீர்கள். ஆண் என்றால் 'அரசு' என்று உயர்த்தி வைத்துப் பேசுவதும், பெண் என்றால் தாழ்வாகப் பேசுவதும் ஆச்சிமார்களிடம் மட்டுமல்லாமல் நம் நாட்டிலேயே பெண்களிடம் பழக்கமாகிவிட்டது.

தேச விடுதலைக்குப்பின் எண்ணங்கள் மாறி வருகின்றன. நடப்புகள் மாறி வருகின்றன. சூழ்நிலைகள் மாறி வருகின்றன. சில நாளைக்கு முன் ஒரு செய்தி கேள்விப்பட்டேன். நம் சமூகத்தில் கணவனும் மனைவியும் டாக்டர்களாக உள்ள ஒரு குடும்பம். மனைவிக்கு வெளி நாட்டில் வேலை கிடைத்தது. நல்ல வாய்ப்பை விட்டுவிடாமல், அவள் கணவனிடம், ''நீங்கள் தொடர்ந்து இங்கே பணியாற்றுங்கள். நான் அங்கு உங்களுக்கு வேலை தேடி, உங்களை அழைத்துக் கொள்ளுகின்றேன்'' என்று கூறி, வெளிநாடு சென்றுள்ளாள். காலம் எவ்வளவு மாறிவிட்டது என்று காட்டு


வதற்காக இதைச் சொன்னேன்.

இன்ஜினியராக, டாக்டராக, வழக்குரைஞராக, விஞ்ஞான ஆராய்ச்சியாளராக, பேராசிரியராக நகரத்தார் பெண்கள் பணியாற்றுகிறார்கள். உங்கள் பேர்த்தி ஏன் ஒரு கலெக்டராக, அரசுச் செயலாளராக, வங்கி நிருவாகியாக வரக்கூடாது?

அவ்வாறு வாய்ப்பு உள்ள இந்தக் காலத்தில் பெண்ணைப் பொட்டை, பொட்டைக்கழுதை என்றெல்லாம் கூறுவது முறையா? அவளையும் 'அரசு' என்றே சொல்லலாம். ''பெண் அரசு கேட்கின்றார் பெண்மை வாயால்'' என்பார் பாரதியார்.

நான் மேலே சொல்லியபடி உயர்ந்த பணிகளில் உள்ள நகரத்தார் பெண்கள் விரல் விட்டு எண்ணிவிடக் கூடியவர்களே. இந்த எண்ணிக்கை போதாது. பொதுவாக, நம் சமூகத்தில் பையன்களை விடக் குறைந்த எண்ணிக்கை உடைய பெண்களே படிக்கிறார்கள். உயர் கல்வியில்-அதாவது கல்லூரிப் படிப்பில் நுழையும் பெண்கள் இன்னும் குறைவு.

தொடக்கத்திலிருந்தே பெண் குழந்தைகளுக்குப் 'பணியாள்' மனப்பான்மையை வளர்த்து விடும் பழக்கம் பல ஊர்களில், பல குடும்பங்களில் தொடர்ந்து இருந்து வருகிறது. படித்த பெண்கள்கூட இந்த மனப்பான்மையிலிருந்து விடுபடவில்லை. படித்த பெண்களுக்கு வரதட்சிணை இல்லாமல் திருமணம் நடக்கிறதா? குறைவாகவாவது வாங்குகிறார்களா? அது நிற்காததைப்போல் பெண்களிடம்



மதுரை நகரத்தார் புத்தக வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் திரு. லேனா தமிழ்வாணன் பேசியபோது எடுத்த படம்.



கோட்டையூர் அ. நா. ச. நாராயணன் செட்டியார் அவர்களுக்கு கௌசல்யா ஆச்சி உடனுயிருக்க 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 30-12-89 அன்று கோட்டையூரில் சிறப்பாக நடைபெற்றது.

'வேலைக்கார மனப்பான்மை' யும் நீங்கவில்லை. அதைப் பயன் படுத்தும் - ஆண்களின் சுயநல மும் மாறவில்லை.

பெண் அடுப்படியிலேயே முடங்கப் பிறந்தவளா? வாழப் பிறந்தவள் அல்லவா? ஆளப் பிறந்தவள் அல்லவா? பையனுக் கும் பெண்ணுக்கும் ஏன் வேறு பாடு காட்ட வேண்டும்?

பையனைப் போலவே பெண் ணுக்கும் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி, தொழிற் கல்லூரி (இன்ஜினியர், டாக்டர் முதலி யவை) படிப்புகள் வாய்ப்பும் வசதியும், இட ஒதுக்கீடும் இடங் கொடுக்கும் போதெல்லாம் அளிக்கப்படவேண்டும். வசதி இல்லாத குடும்பத்தில் பெண்கள் படிப்பதற்கு நம் நகரத்தார் சங் கங்கள் உதவி செய்யவேண்டும்.

பெண்கள் பெருவாரியாகப் படித்தால்தான் பெண் அடிமை நீங்கும். பெண்கள் படிக்க வேண் டும். பணியில் அமர்ந்து சம்பா திக்கவேண்டும். **'தான் வாழ்க் கைக்கு ஆணைச் சார்ந்து இருக்க வேண்டியவள்'** என்ற எண்ணம், நிலை பெண்களை விட்டு மாறவேண்டும். ''பெண் ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில் மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே'' என்றார் பாரதிதாசனார். சுதந் திர உணர்வும், தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றலும் பெற்ற பெண்ணின் வயிற்றில் தான் சுதந்திர உணர் வுடைய மக்கள் பிறப்பார்கள். அப்போதுதான் நாட்டின் அடி மைத்தனம் உண்மையில் நீங்கும்.

ஆங்கில அரசு போய்விட்டது என்ற பெயர்தான். நமது நாட்டில் அடிமை எண்ணங்கள் போய்விட்டனவா?

உங்கள்
அன்புத் தம்பி
மணிவண்ணன்.
(தொடரும்)

குழந்தைகளுக்கான போட்டியில் பரிசு பெற்ற பெண்

ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவின் சென்னை மண்டலம் ஆரோக்கியமான குழந்தைகளுக்கான போட்டியை 29-11-89 அன்று சென்னையில் நடத்தியது. சென்னை ஆசான் நினைவு சீனியர் செகண்டரிப் பள்ளியில் நடைபெற்ற இப்போட்டியில் 50 குழந்தைகள் பங்கேற்றனர்.

நடுவர் குழு பரிசீலனை செய்து சிறந்த ஆரோக்கியமான குழந்தைகளைத் தேர்வு செய்தது.



இரண்டரை வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான போட்டியில் நான்கு குழந்தைகளும் இரண்டரை வயது முதல் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான போட்டியில் நான்கு குழந்தைகளும் தேர்வு செய்யப் பெற்றனர்.

இரண்டாவது போட்டியில் தேர்வு செய்யப்பெற்ற நால்வரில் படத்தில் காணும் சீதா என்ற ஆர்த்தியும் ஒருவள். போட்டியில் ரூ. 200 ரொக்கப் பரிசு பெற்ற இவள் தேவகோட்டை இராம. தினமணிச் செட்டியார் அவர்களின் பேத்தி ஆவாள். இவளது தந்தை திரு. D. செந்தில்முருகன் B. Tech ராணிப்பேட்டையில் உள்ள கோரமண்டல் லெதர்ஸ் பி லிட். நிறுவனத்தில் பொது மேலாளராகப் பணியாற்றி வருகிறார்.

பரிசளிப்பு விழாவிற்கு வருமானவரித் துறை ஆணையாளர் திருமதி விஜயலெட்சுமி தலைமை வகிக்க ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவின் தலைமைப் பொது மேலாளர் திரு. சுப்பாராவின் துணைவியார் பரிசுகளை வழங்கினார்.

இராமேஸ்வரம் - காசி பாதயாத்திரை

இராமேஸ்வரம்-காசி இரண்டாம் நடைப் பயணக் குழு திருத்தொண்டர் திரு. ஆர். வயிரவன் தலைமையில் 1-3-90 அன்று இராமேஸ்வரத்திலிருந்து காசிக்குப் பாதயாத்திரை புறப்படுகிறது. இக்குழுவினர் தம்முடன் ஒரு சைக்கிள் ரிக்ஷாவைக் (மோட்டார் பொருத்தியது) கொண்டு செல்கின்றனர். இதில் தமது பயணத்துக்குரிய பொருள்களை எடுத்துச் செல்கின்றனர். பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள இதை செட்டிநாட்டரசர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் அன்பளிப்பாக வழங்கி உள்ளார். இக்குழுவினர் செல்லும் பாதையில் உள்ள இந்தியன் வங்கி, மதுரை வங்கி, கனரா வங்கிக் கிளைகள் இக்குழுவினர்க்கு உதவி செய்ய இந்தியன் வங்கித் தலைவர் திரு. கோபாலகிருஷ்ணன், மதுரை வங்கித் தலைவர் திரு. சுப. சபாபதி, கனரா வங்கியின் பொது மேலாளர் திரு. ஆர்எம். வெங்கடாசலம் ஆகியோர் ஆவன செய்துள்ளனர். மேலும் இக்குழுவினரை வரவேற்க திருச்சி, சேலம், தர்மபுரி, ஒசூர், பெங்களூர், ஹைதராபாத் நகரத்தார் சங்கங்கள் விரிவான ஏற்பாடுகள் செய்து வருகின்றன. இதற்கான முன்னேற்பாடுகளை 'காசிஸ்ரீ' திரு. அரு சோமசுந்தரன் செய்து வருகிறார்.

நகரம் - ஓர் விளக்கம்

இராம. ஆவிச்சி, எம். ஏ. (உளவியல்);

எம். ஏ. (காந்தியச் சிந்தனை)

தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் சமுதாய நலத்துறையின் 28-3-89ஆம் தேதியிட்ட அரசாணை எண். 242ல் கண்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் அட்டவணையில் 84வது உறுப்பாகச் சேர்க்கப்பட்டுள்ள 'நகரம்' என்பது எந்த ஜாதியினரைக் குறிக்கும் என்பதற்கு ஓர் விளக்கம்.

தமிழ்நாட்டில் 'செட்டிநாடு' என்று அழைக்கப்படுகின்ற தேவகோட்டை, காரைக்குடி பகுதியைச் சார்ந்து வாழ்ந்து கொண் டிருக்கின்ற நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் என்ற 1. 'நகரத் தார்கள்' அவர்களுடைய வழிபடு கோயில்களை 2. 'நகரக்கோயில்' என்றும், புண்ணியஸ்தலங்களில் அவர்கள் தங்குவதற்காகக் கட்டி வைத்திருக்கின்ற கட்டிடங்களை 3. 'நகர விடுதி' என்றும் அழைக் கின்றார்கள்.

தமிழின் புணர்ச்சி விதிப்படி பார்க்கின்றபோது நகரம்+கோயில் நகரக்கோயில் என்றும், நகரம்+விடுதி = நகரவிடுதி என்றும் தான் இருக்கின்றன. எனவே 'நகரம்' என்பது நகரத்தார்களாகிய நாட்டுக் கோட்டைச் செட்டியார்களையே குறிக்கும் என்ற முடிவுக்கு வரலாம். முடிந்த முடிவுக்கு வருவதற்கு இது மட்டுமே போதாது. எனவே, வேறு பல சான்றுகளும் தேவைப்படுகின்றன.

மதுரை தமிழ்ச்சங்கத்து உறுப்பினரும் புத்தக வணிகருமான இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் அவர்களால் முதல் பதிப்பாக 1937லும் இரண்டாவது பதிப்பாக 1956லும் வெளியிடப்பட்ட ''மதுரைத் தமிழ் பேரகராதி'' என்ற இரு பாகங்கள் கொண்ட புத்தகம் தருகின்ற சான்றுகள் 'நகரம்' என்பது நகரத்தார்களாகிய நாட்டுக்கோட்டைச் செட்டியார்களையே குறிப்பதாக உள்ளது.

4. 'நகரம்' என்பது இராசமனை, ஓரெழுத்து, பட்டணம், மருத நிலத்தூர், கோயில், ஊர், நகரமாட்டோம் என்ற பொருள்களில் பேசப்படுகின்றன நகரத்தார்களின் வீடுகள் 'இராசமனை' போலப் பெரிதாகவும், கலைவளம் மிக்கதாகவும் அமைக்கப்பட்டிருப்பது எல்லாருக்கும் தெரிந்த உண்மை. 'ஓரெழுத்து' என்பது தமிழின் பாற்பட்டது. 'மருதநிலத்தூர்' என்பது நகரத்தார்கள் காவிரிப்பூம்-பட்டினத்திலிருந்து வந்து குடியேறிய வயலும் வயல் சார்ந்த பகுதியிலுள்ளஊரினைக் குறிக்கும். 'கோயில்' என்பது நகரத்தார்கள் மட்டுமே கோயிலை முதன்மையாகக் கொண்டு தங்களை 'இளையாற்றங் குடிக் கோயில்', 'மாற்றூர்க் கோயில்', 'வயிரவன்(பட்டி) கோயில்', 'பிள்ளையார்பட்டிக் கோயில்', 'இரணியூர்க் கோயில்' 'சூரக்குடிக் கோயில்', இலுப்பக்குடிக் கோயில்', 'நேமம் கோயில்', வேலங்குடிக் கோயில்' என்ற ஒன்பது கோயிலுக்குள் அடக்கிக் கொண்டவர்கள். 'ஊர்' என்பது நகரத்தார்களின் கோயில் பெயர்கள் எல்லாம் ஊர் சார்ந்து வருவதனைத் தெளிவாகக் காட்டும். 'நகரமாட்டோம்'

என்பது 'நகரு' என்ற வினையின் எதிர்மறைச்சொல். எனவே 'நகரம்' காட்டுகின்ற ஏழு பொருள்களில் ஆறினைக் கண்டு விட்டோம். 'பட்டணம்' என்பது மட்டும் விடுபடுகின்றது.


'பட்டணம்' என்பது அதில் வாழுகின்ற மக்கள் ஆகி 'பட்டணத்தார்' என்று கூறப்படும். 5. 'பட்டணத்தார்' என்பவர் நெய்தல் நிலத்தார் ஆவர். நெய்தல் நிலத்தில் வாழுகின்றவர்கள் 6. 'நெய்தல் நிலமக்கள்' ஆவர். அளவர், நுளையர், பரதவர், வலையர், கடலிடம் வசிப்போர் என்பவர் நெய்தல் நிலமாக்களாவர். இவர்களில் 7. 'அளவர்' என்பவர் உப்பமைக்குந் தொழிலாளர் 8. 'நுளையர்' என்பவா பரதவர்; 9. 'பரதவர்' என்பவர் வைசியர் 10. 'வலையர்' என்பவர் வலைஞர் ஆவர்.

இவர்களில் 'அளவர்' என்கின்ற உப்பமைக்குந் தொழிலாளரான 'உப்புக்குறவர்' அல்லது 'செட்டிபள்ளிக் குறவர்' என்பவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அட்டவணையில் 243ஆவது உறுப்பாகவும். 'வலையர்' என்ற வலைஞர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அட்டவணையில் 179, 247வது உறுப்பாகவும் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே நெய்தல் நிலமக்களாகக் காணப்படுகின்ற நான்கு வகையினருள் 'அளவர்', 'வலையர்' என்ற இருபிரிவினரும் அட்டவணையில் தனித்தனியாக இடம் பெற்று விட்டதால் 'நகரம்' எனபது இவர்களைக் குறிப்பதாகக் கொள்ள முடியாது.

நுளையரைப் பரதவர் என்றும் பரதவரை வைசியர் என்றும் கூறியிருப்பதால் நுளையர்தான் பரதவர், வைசியர் என்று காணக்கிடக்கின்றது. 11. 'வைசியர்' என்பவர் மூன்றுவது சாதியர், அவர் 'தனவைசியர்', அல்லது வணிகர், 'பூவைசியர்', அல்லது உழவர், 'கோவைசியர்' அல்லது இடையர் என மூன்று வகுப்பினர் ஆவர். இவர்களில் 12. 'தனவைசியர்' என்பவர் தனவணிகர் ஆவர். 13. 'பூவைசியர்' என்பவர் களமர், உழவர், காராளர், வேளாளர் என்பவராவர். 14. 'கோவைசியர்' என்பவர் இடையராவர்.

'கோவைசியர்'களாகிய இடையர் என்பவர் 'யாதவா' என்ற பெயரில் பிற்படுத்தப்பட்டோர் அட்டவணையில் 141வது உறுப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளதால் 'நகரம்' என்ற ஜாதி இவர்களைக் குறிப்பதாகக் கொள்ள முடியாது;

'பூவைசியர்'களில் 15. களமர், என்பவர் உழவர், சூத்திரர் என்றும் 16. 'உழவர்' என்பவர் சூத்திரர், படைவீரர் என்றும், 17. 'காராளர்' என்பவர் சூத்திரர், வேளாளர் என்றும் 18. 'வேளாளர், என்பவர் ஈகையாளர் என்றும் பொருள்பட விளங்குகின்றனர். இதை வைத்துப் பார்க்கும்போது பூவைசியர் என்பவர் சூத்திரர் என்றும் படைவீரர் என்றும் ஈகைமிக்க வேளாளர் என்றும் உழவர் என்றும் காணக்கிடக்கின்றது. இதில் சூத்திரர்களாகிய படைவீரர்கள் 'க்ஷத்திரியர்கள்' என்று அழைக்கப்பட்டு பிற்படுத்தப்பட்டோர் அட்டவணையில் 115, 122வது உறுப்பாகவும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அட்டவணையில் 170வது உறுப்பாகவும் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே 'நகரம்' என்ற ஜாதி இவர்களைக் குறிப்பதாகக் கொள்ள முடியாது.



திருச்சி ஏவி. கே. பேங்கர்ஸ், ஹோட்டல் மிட்லண்டு ஆகியவற்றின் நிர்வாகப் பங்குதாரர் தேவகோட்டை ஏவி. கே. ஆவிச்சி செட்டியார் அவர்கள் தன் அண்ணன் பேரன் செந்தில்நாதன் B.Com C.A (Final) ஐ தேவகோட்டையில் 8-12-89 அன்று நிகழ்ந்த விழாவில் காசிநாதன் எனப் பெயரிட்டுச் சுவீகாரம் செய்து கொண்டார்கள். 'முத்தமிழ்க் காவலர்' கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வாழ்த்தரங்கத்தில் முனைவர் சுப. அண்ணாமலை, திரு. கண. சிற்சபேசன், ஆடிட்டர் திரு. பெரி. தியாகராஜ், அமைச்சர் திரு. பெரியசாமி, திரு. எஸ். ஏ.ஆர். பழநியப்ப செட்டியார், திரு. எஸ். அண்ணாமலை செட்டியார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

ஈகைமிக்க வேளாளர்கள் வெள்ளாளர் என்ற பெயரில் பிற்படுத்தப்பட்டோர் அட்டவணையில் 35, 49, 61, 65, 67, 79, 90, 91, 93, 103, 118, 137 ஆகிய உறுப்புகளாகவும் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே, 'நகரம்' என்ற ஜாதி இவர்களைக் குறிப்பதாகவும் கொள்ள முடியாது.

எனவே, எஞ்சி நிற்பவர்கள் 'தனவைசியர்' என்ற தனவணிகர் தான். தனவணிகர் என்பவர் தனத்தை வைத்து வணிகம் செய்பவர்கள். உலகத்திலேயே லேவாதேவித் தொழிலை (இன்டிஜீனஸ் பாங்கர்ஸ்) முதன் முதலாகச் செய்தவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களாகிய நகரத்தாரும், ஜூஸ் (Jews) என்றழைக்கப்படுகின்ற ஜாதியினரும்தான். எனவே, பிற்படுத்தப்பட்டோர் அட்டவணையில் 84வது உறுப்பாக இருக்கின்ற 'நகரம்' என்பது நாட்டுக்கோட்டைச் செட்டியார் ஆகிய நகரத்தார்களையே குறிக்கும்.

ஆதாரம்: 'மதுரைத் தமிழ்ப் பேரகராதி' மதுரை தமிழ்ச் சங்கத்து உறுப்பினரும் புத்தக வணிகருமான இ. மா. கோபால கிருஷ்ணக்கோன் வெளியிட்டது. முதற்பதிப்பு 1937, 2வது பதிப்பு 1956.

ஆதாரங்கள் 2வது பதிப்பிலிருந்து,

1. நகரத்தார், நகரத்தாளர்:- பட்டணத்தார், நாட்டுக் கோட்டை செட்டிகள் (பாகம் 2, பக்கம் 1, பத்தி 2 வரிகள் 25, 26)

2. நகரக்கோயில்:- செட்டி வகுப்பார் வணங்கும் ஒன்பது கோயில் (பாகம் 2, பக்கம் 1, பத்தி 2, வரிகள் 20, 21)

3. நகரவிடுதி:- நாட்டுக்கோட்டையார் தங்கும் கட்டிடம் (பாகம் 2, பக்கம் 2, பத்தி 1 வரிகள் 4, 5)

4. நகரம்:- இராசமனை, ஒரெழுத்து, பட்டணம், மருதநிலத் தூர், கோயில், ஊர், நகரமாட்டோம் (பாகம் 2, பக்கம் 1,2, பத்தி, 2 வரி 23 & பத்தி 1 வரிகள் 1, 2)

5. பட்டணத்தார்:- நெய்தல் நிலத்தவர்(பாகம் 2, பக்கம் 113, பத்தி 1, வரிகள் 27)

6. நெய்தல் நிலமாக்கள்:- அளவர், நுளையர், பரதவர், வலையர் கடலிடம் வசிப்போர் (பாகம்2, பக்கம் 82, பத்தி2, வரிகள் 21, 22)

7. அளவர்:- உப்பமைக்குந் தொழிலாளர் (பாகம் 1, பக்கம் 167, பத்தி 1 வரி 36)

8. நுளையர்:- நெய்தல் நிலமாக்கள், பரதவர் (பாகம் 2, பக்கம் 76, பத்தி 1, வரி 7)

9. பரதவர்;- நெய்தல் நிலமாக்கள், வைசியர், (பாகம் 2, பக்கம் 132, பத்தி 2, வரி 5)

10. வலையர்:- நெய்தல் நிலமாக்கள், வலைஞர் (பாகம்2, பக்கம் 535, பத்தி 1, வரி 16)

11. வைசியர்:- மூன்றாவது சாதியர், அவர் தனவைசியர் அல்லது வணிகர், பூவைசியர் அல்லது உழவர், கோவைசியர் அல்லது இடையர் என மூன்று வகுப்பினர். இவர்க்கு ஓதல், வேட்டல், உழவு, ஆன்காத்தல், வாணிகம் என்பனவும் பூணூலும் உரியவை. (பாகம்2, பக்கம் 660, பத்தி 1, வரிகள் 5 முதல் 11 வரை)

12. தனவைசியர்:- மூவகை வைசியரிலொருவர். அவர் தன வணிகர் (பாகம் 1, பக்கம் 1103, பத்தி 2, வரிகள் 29, 30)

13. பூவைசியர்:- களமர், உழவர், காராளர், வேளாளர். இவர் மூவகை வைசியரிலொருவர் (பாகம் 2, பக்கம் 286, பத்தி 1, வரிகள் 48, 49)

14. கோவைசியர்:- மூவகை வைசியரிலொருவர், அவர் இடையர் (பாகம் 1, பக்கம் 773, பத்தி 2, வரிகள் 11, 12)

15. களமர்:- அடியார், உழுநர், சூத்திரர், மருதநிலமாக்கள், (பாகம் 1, பக்கம் 557, பத்தி 1, வரிகள் 11, 12)

16. உழவர்:- சூத்திரர், படைவீரர், பூவைசியர், மருதநில மாக்கள், வேளாளர், முயல்வோர் (பாகம் 1, பக்கம் 365, பதி 2, வரிகள் 11, 12)

17. காராளர்:- சூத்திரர், பூவைசியர், வேளாளர் (பாகம் 1, பக்கம் 602, பத்தி 1, வரி 37)

18. வேளாளர்:- ஈகையாளர், பூவைசியர், மூவகை வைசியர் பொதுப்பெயர் (பாகம் 2, பக்கம் 656, பத்தி 1, வரி 39)



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ "நகரத்தார் குரல்" 9ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. உங்கள் கைகளில் தவழும் இதழ், 97 ஆவது இதழாகும்.

ஃ நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் திருச்சி நகரத்தார் சங்கத்தின் முயற்சியில் 29-1-90 அன்று பிள்ளையார்பட்டியில் ஐந்து கூட்டுத் திருமணங்கள் சிறப்பாக நடைபெற்றன.

ஃ கவியரசர் கண்ணதாசன் நினைவாக மணி மண்டபம் கட்ட காரைக்குடி, நெல்லிக்காவூருணியில் 30-1-90 அன்று நடைபெற்ற விழாவில் தமிழக முதல்வர் கலைஞர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள்.

ஃ பள்ளத்தூர் ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 29-1-90 அன்றும் நகரச் சிவன் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 1-2-90 அன்றும் சிறப்பாக நடைபெற்றன.

ஃ நாட்டரசன்கோட்டை, பாகனேரி ஆகிய ஊர்களில் 16-1-90 செவ்வாய்க் கிழமையன்று செவ்வாய்ப் பொங்கல் சிறப்பாக நடைபெற்றது.

ஃ விழுப்புரம் நகரத்தார் சங்கச் செயலாளரும் விழுப்புரம் காமராஜ் நகராட்சி மேல் நிலைப் பள்ளியின் உதவித் தலைமை ஆசிரியருமான திரு. ஏ ஆர். மெய்யப்பன் பதவி உயர்வு பெற்று சிவகாசி நகராட்சி மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஃ சிதம்பரம் அண்ணாமலைப் பல்

கலைக் கழகத்தின் துணை வேந்தர் திரு. ஆர்எம். சேதுநாராயணன் 29-1-90 அன்று பதவியிலிருந்து ஓய்வு பெற்று சென்னையில் வாழ்ந்து வருகிறார்.

ஃ பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் சார்பில் கவியரசு கண்ணதாசன் விழா 1990 மார்ச் நான்காம் வாரத்தில் நடைபெறும் என அதன் தலைவர் திரு. சொ. அழகப்பனும் பொதுச் செயலாளர் 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பனும் அறிவித்துள்ளனர்.

ஃ காரைக்குடி எஸ். எம். எஸ். வி. மேல்நிலைப் பள்ளியின் பவள விழா ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டிடங்களின் திறப்பு விழாவும் 12-1-90 அன்று சிறப்புற நிகழ்ந்தன.

ஃ விளையாட்டு வீரர் கடியாபட்டியைச் சேர்ந்த திரு. ஆனந்த நடராஜனுக்கு திருநெல்வேலி நகரத்தார் சங்கம் சார்பாக 31-12-89 அன்று திருநெல்வேலியில் பாராட்டு விழா நடைபெற்றது.

ஃ ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நாளன்று சங்கக் கட்டிடத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும் என திருச்சி நகரத்தார் சங்கம் அறிவித்துள்ளது.

ஃ திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பில் 7-2-90 புதனன்று இரவு திருச்சி தாயுமான சுவாமி சன்னதியில் பஞ்சமூர்த்திகளுக்கு அபிஷேகம் தீபாராதனையும் 8-2-90 வியாழனன்று வாகன மண்டபத்தில் தீபாராதனையும் நடை பெற உள்ளன.

ஃ ஆவினிப்பட்டி காட்டுச் சுப்பையா கோவில் குடநீராட்டு விழா 1-2-90 அன்று நடைபெற்றது.

ஃ கண்டனூர் செட்டியார் ஊரணி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 1-2-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ தேவகோட்டை ஸ்ரீ பத்திர காளியம்மன் கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 1-2-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ திருப்பூர் நகரத்தார் சங்கக் கட்டிட நிதிக்காகத் திருப்பூரில் 24-12-89 அன்று கிரேஸி மோகனின் ''மதில் மேல் மாது'' என்ற நாடகம் நடத்தப் பெற்றது.

திருமணம்

அலவாக்கோட்டை சுப. சா. பழநியப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி வள்ளியம்மை B. A. க்கும் நேமத்தான்பட்டி பெ. செ. சொ. கி. நாச்சியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சொக்கலிங்கம் B Com. க்கும் சென்னை வடபழநி முருகன் கோயிலில் 30-11-89 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. உடல் ஊனமுள்ள இப் பெண்ணை மணமகன் முழுச் சம்மதத்துடன் மணந்து கொண்டது பாராட்டத்தக்கது.

விழுப்புரத்தில் பாராட்டு விழா

விழுப்புரம் நகரத்தார் சங்கத்தின் சார்பில் 4-3-90 ஞாயிறன்று மாலை விழுப்புரத்தில் முனைவர் தமிழண்ணல் அவர்கட்கும் மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி அவர்கட்கும் அரசு வழக்கறிஞர் திரு. ஏ. ஆர். இலட்சுமணன் அவர்கட்கும் பாராட்டு விழா நடைபெற உள்ளது.

நான்கு வாரங்கள் !

மாதச் சம்பளம் வாங்குகிறவனைப் பற்றிச் சொல்லும் போது நான்கு வாரங்களைக் குறிப்பிடுவார்கள் ;


முதல் வாரம் - *Golden Week*
இரண்டாவது வாரம் - *Silver Week*
மூன்றாவது வாரம் - *Copper Week*
நான்காவது வாரம் - *Popper Week* என்பார்கள்.

— சொ. சொ. மீ. சுந்தரம்

(மதுரை நகர விடுதியில் 29-1-90 அன்று திரு. சுப. சபாபதிக்கும் முனைவர் திரு. தமிழண்ணலுக்கும் நடைபெற்ற பாராட்டு விழாவில்)

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் ஆவினிப் பட்டியைச் சேர்ந்த திரு. இராம. முத்தையா திருவனந்தபுரத்தி லுள்ள விக்ரம் சாராபாய் விண் வெளி மையத்தில் பொறியாளரா கப் பணியாற்றி வருகிறார். இவர் இந்தியன் வேதியியல் பொறியி யல் கழகத்தின் (Indian Institute of Chemical Engineers) கௌன்



ஸில் உறுப்பினராக 1989 - 92ஆம் ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். 1984ல் திருவனந்த புரம் மண்டல மையம் (Trivandrum Chapter) தொடங்குவதற் குப் பாடுபட்டவர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். அவருக்கு நமது பாராட்டுகளைத் தெரிவித் துக் கொள்கிறோம்.

நாட்டரசன்கோட்டையில் இலவச கண் சிகிச்சை, குழந்தைகள் நல மருத்துவ முகாம்

மதுரை மீனாட்சி அரிமா சங்கம், மதுரை அரவிந்த் கண் மருத்துவ மனையுடன் இணைந்து நாட்டரசன்கோட்டை கானாடு காத்தான் முத்தையா சுப்பையா செட்டியார் பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் 25-2-90 ஞாயிறு காலை 9-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை இலவச கண் சிகிச்சை முகாமையும், குழந்தைகள் நலம் மற்றும் பொது மருத்துவ முகாமையும் விரிவான அளவில் நடத்த இருக் கிறது. இந்த மருத்துவ முகாமில் நாட்டரசன்கோட்டை மற்றும் அதனருகே உள்ள ஊர் பொது மக்கள் அனைவரும் பங்கு பெற் றுப் பயனடையுமாறு மதுரை மீனாட்சி அரிமா சங்கத்தின் தலைவர் நாட்டரசன்கோட்டை திரு. எஸ். சொக்கலிங்கம் கேட் டுக்கொள்கிறார்.

திருப்பூர் சங்கம்

திருப்பூர் நகரத்தார் சங்கத் திற்கு, 31-12-89 அன்று நடை பெற்ற சங்கக் கூட்டத்தில் 1990-91 ஆம் ஆண்டிற்கு திரு. எம். தியாகராஜன் தலைவராக வும் திரு. கே. சொக்கலிங்கம் செயலாளராகவும் திரு. எல். ஆர்எம். இராமசாமி பொருளா ளராகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

சிதம்பரத்தில் லேனாவின் உரை

சிதம்பரம் நகரத்தார் சங் கத்தில் 30-12-89 அன்று நடை பெற்ற சிறப்புக் கூட்டத்தில் ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன் 'மாற் றங்களும் ஏற்றமும்' எனும் தலைப்பில் உரையாற்றினார். சங் கத் தலைவர் முனைவர் திரு. ச. மெய்யப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். செயலாளர் திரு. அரு. இராமநாதன் நன்றி கூறி னார்.



மகிபாலன்பட்டி 'சிவநெறிச் செம்மல்' 'திருநெறிப் புலவர்' திரு. சி. ராம நாகப்ப செட்டியார் - திருமதி நா. கண்ணம்மை ஆச்சியின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா 5-1-90 அன்று மகிபாலன்பட்டியில் சிறப்பாக நடைபெற்றது. மணி விழாவை யொட்டி 'தமிழ்க் கடல்' முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் தலைமையில் வாழ்த்தரங்கமும் பிற்பகலில் கவியரங்கமும் நிகழ்ந்தன மணி விழா மலரை தொழிலதிபர் தேவகோட்டை சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் வெளியிட்டார்கள்.

திருமகளும் கலைமகளும் !

திருமகளும் கலைமகளும் திருப்புத்தூருக்கு வந்து மகிபாலன் பட்டிக்குள் நுழைந்தார்கள். கலைமகள் பண்டிதமணி வீட்டுக்குள் நுழைந்தாள். திருமகள் அதற்கு நேர் எதிர்வீடான சி. ராம. இராமசாமி செட்டியார் வீட்டில் நுழைந்தாள். கலைமகள் பார்வையால் பண்டிமணி வீட்டில் கல்வி செழித்தது. திருமகள் பார்வை இராமசாமி செட்டியார் வீட்டில் செல்வத்தை வளர்த்தது. கலைமகளும் திருமகளும் ஒருவரையொருவர் நினைத்ததால் இரண்டு வீடுகளிலும் இரண்டும் வளர்ந்தன.

— சொ. சொ. மீ. சுந்தரம்

(சி. ராம. நாகப்ப செட்டியார் மணி விழாவில்)

பாராட்டு விழா

பாங்க் ஆஃப் மதுரையின் புதிய தலைவராகவும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ள சுப. சபாபதி அவர்களுக்கும் தமிழக அரசின் திரு. வி. க. விருதும் பல்கலைக் கழக மான்யக் குழுவின் சிறப்பு நிலைப் பேராசிரியர் விருதும் பெற்றுள்ள முனைவர் தமிழண்ணல் அவர்களுக்கும் மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் நகர விடுதியில் 29-1-90 திங்களன்று மாலையில் பாராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றுப் பாராட்டிப் பேசினார்கள். எவர் பிரைட் திரு. நாச்சியப்ப செட்டியார் இறைவணக்கம் பாட, செயலாளர்களின் ஒருவரான பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் வரவேற்றுப் பேசினார்.

திரு. சுப. சபாபதியையும் முனைவர் திரு. தமிழண்ணலையும் பாராட்டி சிதம்பரம் நகரத்தார் சங்கத்தின் தலைவரும் பேராசிரியருமான முனைவர் திரு. ச. மெய்யப்பன் மதுரை வங்கியின் மதுரை மண்டல மேலாளர் திரு. பூமி சுப்பிரமணியன் நகரத்தார் புத்தக வங்கியின் தலைவர் திரு. பழ. இராமசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

தமக்களித்த பாராட்டுக்களுக்கு திரு. சுப. சபாபதியும் முனைவர் திரு. தமிழண்ணலும் ஏற்புரை நல்கி நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

சிறப்பு விருந்தினர்களுக்கு நாகப்பா குருப் நிறுவனங்களின் பங்குதாரரும் ஸ்ரீ காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம் மேலாண்மைக் கழகத்தின் செயலாளருமான இராம. முத்தழகப்ப செட்டியார் அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்கள்.

செயலாளர்களில் மற்றொருவரான திரு. எம். சிஎன். மாணிக்கம் நன்றி கூறினார்.

இவ்விழாச் செலவுகளை திரு. இராம. முத்தழகப்ப செட்டியார் அவர்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள்.

காரைக்குடியில் கண்ணதாசன் மணி மண்டபம

காரைக்குடியில் நெல்லிக்காஊருணி என்ற இடத்தில் கவியரசர் கண்ணதாசன் நினைவாக மணி மண்டபம் கட்டுவதற்கு 30-1-90 அன்று தமிழக முதல்வர் கலைஞர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டிப் பேசினார்கள். விழாவிற்குத் தமிழக அமைச்சர் திரு. கே. என். நேரு தலைமை வகித்தார்.

தனக்கும் கண்ணதாசனுக்கும் இருந்த 40 ஆண்டுகளுக்கும் மேலான நட்பின் அடிப்படையில் மணி மண்டபம் கட்டுவதற்கான விழாவில், தான் நெகிழ்ந்த உள்ளத்தோடு கலந்து கொள்வதாக முதல்வர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

ஒரு ஏக்கர் நிலப் பரப்பில் 30 இலட்சம் ரூபாய் செலவில் 6 மாதங்களில் மணி மண்டபம் கட்டி முடித்துத் திறப்பு விழா நடத்தப்படும் என்றார்.

இவ்விழாவில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் கண்ணதாசனின் சகோதரர் திரு. கண்ணப்ப செட்டியார், கவிஞரின் துணைவியார், புதல்வர்கள் கலந்து கொண்டனர்.

பிள்ளையார் நோன்பு

மதுரை

மதுரை நகர விடுதியில் 2-1-90 அன்று பிள்ளையார் நோன்பு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. சங்கத்தின் தலைவர் திரு. லெ. நாராயணன் செட்டியார் எவர்பிரைட் திரு. நாச்சியப்ப செட்டியார் திரு. ஆர்எம். என். கோவிந்தன் செட்டியார் மூவரும் 360 பேருக்கு இலை எடுத்துக் கொடுத்தனர். பின்னர் 9 மங்கலப் பொருட்கள் ஏலம் விடப் பெற்றன.

ஸ்ரீவில்லிபுத்தூர்

ஸ்ரீவில்லிபுத்தூர் நகரத்தார் சங்கத்தின் சார்பாக 2-1-90 அன்று பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெற்றது. சங்கத் தலைவர் திரு. சோம. மு. முத்தையா செட்டியார் இலை எடுத்துக் கொடுத்தார்.

திருப்பூர்

திருப்பூர் நகரத்தார் சங்கத்தின் சார்பாக திருப்பூரில் 2-1-90 அன்று பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெற்றது. சுமார் 400 பேர் கலந்து கொண்டனர்.

ஈரோடு

ஈரோடு நகரத்தார் சங்கத்தில் 2-1-90 அன்று பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெற்றது. சுமார் 525 பேருக்கு இலை எடுத்துக் கொடுக்கப் பெற்றது.

திருவனந்தபுரம்

திருவனந்தபுரம் நகரத்தார் சங்கத்தில் இரண்டாம் ஆண்டாக 2-1-90 பிள்ளையார் நோன்பு அன்று கொண்டாடப் பெற்றது. சங்கத் தலைவர் திரு. எஸ்எம். செல்லப்ப செட்டியாரும் திரு. எஸ்பி. மீனாட்சி சுந்தரமும் இலை எடுத்துக் கொடுத்தனர்.

பட்டமங்கலம்

பட்டமங்கலம் நகர மடத்தில் 2-1-90 அன்று பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெற்றது. பட்டமங்கலம் திரு வீர. நா கருப்பன் செட்டியார் திரு. சொ. சாமிநாதன் செட்டியார் ஆகிய இருவரும் இலை எடுத்துக் கொடுத்தனர். வெளியூர் நகரத்தார் உட்பட இதில் சுமார் 100 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிதம்பரம்

சிதம்பரம் நகரத்தார் சங்கத்தில் 2-1-90 அன்று பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெற்றது. திருவாளர்கள் அ. சுப. அண்ணாமலை செட்டியார், கும. இராமநாதன் செட்டியார், சோம. லெட்சுமணன் செட்டியார் வெ. வெ. சோமசுந்தரம் செட்டியார் ஆகியோர் சுமார் 250 பேருக்கு இலை எடுத்துக் கொடுத்தனர். விநாயகருக்கு அபிஷேகம், ஆராதனை நடைபெற்றது.

திருமஞ்சன விழா

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாருக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நகரத்தார் சங்கம் சார்பில் 26-1-90 அன்று திருமஞ்சன விழா, அபிஷேகம், அலங்காரம், ஆராதனை சிறப்புற நடைபெற்றது.

மணி விழா

குருவிக்கொண்டான்பட்டி திரு. சிவ. கரு. மு. சொக்கலிங்கம் செட்டியார் - திருமதி கல்யாணி ஆச்சியின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா பிள்ளையார்பட்டியில் 18-1-90 அன்று சிறப்பாக நிகழ்ந்தது.

சுப. சபாபதியின் பாராட்டு விழாவில்...

மதுரை வங்கி, கருமுத்து துவக்கிய வங்கி. தனியார் துறை வங்கிகளில் இது முன்னணி வங்கி ஆகும். திரு. சபாபதியிடம் எனக்கு நேரிடையாகப் பழக்கமில்லை என்றாலும் அவர் நேர்மையானவர்; சிறந்தவர் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்கள் காலத்தில் மதுரை வங்கி இந்தியாவிலேயே சிறந்த வங்கி எனப் பெயர் பெற வேண்டும்.

— நீதிபதி எஸ். பிரதாப் சிங்.

பலருக்கு அறிமுகமாகி நம்மில் ஒருவராக இருக்கிற திரு. சபாபதிக்கு உள்ளன்போடு எடுக்கிற விழா இது. 33 ஆண்டுகள் பணியாற்றிய அவர்கள் படிப்படியாக உயர்ந்து இன்று தலைவர் பதவியை அடைந்திருக்கிறார்கள். இது வங்கிக்கும் பெருமை அளிப்பதாகும்.

— கருமுத்து தி. கண்ணன்

ரிசர்வ் வங்கிக்கு திரு. சபாபதியின் பெயரைத் தலைவர் பதவிக்குச் சிபாரிசு செய்தபோதே பலர் அப்பதவி தங்களுக்குக் கிடைத்ததாக நினைத்து மகிழ்ந்தார்கள். இப்பதவி அவருக்குத் தாய் வீட்டுச் சீதனமாகும். மதுரை வங்கி வரலாறு காணாத நிலைக்கு வரவேண்டும்.

— 'இலக்கியச் சிந்தனை'
ப. லெட்சுமணன்

திரு. சபாபதியை அறிந்தவர்களும் அறியாதவர்களும் பாராட்டுகிறார்கள். இவ்விழாவில் அவரை லெ. நா. அவர்களும் கருமுத்து கண்ணன் அவர்களும் பாராட்டியது சிறப்பு. திரு. சபாபதியை நான் 25 ஆண்டுகளாக அறிவேன். அவர்கள் சிரிப்பார்கள். அதில் ஒரு கவர்ச்சி இருக்கும். என்னைவிட ஆச்சி அவர்களுக்கு அதிகம் தெரியும். எம் ஜி ஆரை யாராவது தொட்டால் அவர் உயர்ந்து விடுவார். அதுபோல் திரு சபாபதியைத் தொட்டால் அவரும் உயர்ந்து விடுகிறார். ரிசர்வ் வங்கியின் ஆளுநராக அவர்கள் வரவேண்டும் என்பது என் ஆசை.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

பாங்க் ஆஃப் மதுரையின் இயக்குநர் குழுவுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டவன். எனக்கு நடைபெற்ற ஒவ்வொரு பாராட்டு விழாவிலும் கருமுத்து குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பங்கு பெற்று பாராட்டியிருக்கிறார்கள். பாங்க் ஆஃப் மதுரை இப்போது 254 கிளைகளையும் 363 கோடி ரூபாய் டெபாசிட்டையும் கொண்டுள்ளது. தமிழ்நாட்டைக் காட்டிலும் வட நாட்டில் எங்களுக்கு மிகுந்த வரவேற்பு இருக்கிறது. மதுரை வங்கி மேலும் மேலும் வளர உங்களது ஆதரவு தேவை.

— சுப. சபாபதி

(மதுரை மக்கள் சார்பில் மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் பாங்க் ஆஃப் மதுரையின் புதிய தலைவர் திரு. சுப. சபாபதிக்கு 29-1-90 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில்.)

தேவகோட்டை இந்தியன் வங்கியின் பொன் விழா

தேவகோட்டை இந்தியன் வங்கியின் பொன்விழா 4-12-89 மாலை சிறப்பாக நிகழ்ந்தது. மண்டல மேலாளர் திரு. சித. சுப்பையா வரவேற்றார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் விழாவிற்குத் தலைமை தாங்கினார். செட்டி நாட்டரசர் திரு. எம். ஏ. எம். இராமசாமி, இந்தியன் வங்கித் தலைவர் திரு. கோபால கிருஷ்ணன். பேராசிரியர் கண. சிற்சபேசன், வெள்ளையன் காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன் எல். எஸ். டி. இராமநாதன் செட்டியார் உ. மு. சுப. லெ. சுப்பையா செட்டியார் சேவுகன் செட்டி, கண்ணன் ஆகியோர் உரையாற்றினர். திரு. ஆத்மராம் நன்றி கூறினர். கிளை மேலாளர் திரு. ஏகநாதன் தக்க ஏற்பாடுகள் செய்திருந்தார்.

திருத்தம்

''நகரத்தார் குரல்'' ஜனவரி '90 இதழில் 7 ஆம் பக்கம் வெளியிடப்பட்டுள்ள திருமணச் செய்தியில் 'பாரத ரத்னு' பிஎல். கே. குப்பான் செட்டியார் அவர்கள் எனத் தவறுதலாக வெளி வந்துள்ளது. அதை 'தர்மரத்னு' பிஎல். கே. குப்பான் செட்டியார் அவர்கள் எனத் திருத்தி வாசிக்கக் கேட்டுக் கொள்கிறோம். தவறைச் சுட்டிக் காட்டிய வாசகர்களுக்கு நன்றி.

மதுரை மக்கள் சார்பில் சபாபதிக்குப் பாராட்டு

மதுரை மக்கள் சார்பில் பாங்க் ஆஃப் மதுரையின் புதிய தலைவர் திரு. சுப. சபாபதிக்கு மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் 29-1-90 இரவு ஒரு பாராட்டு விழாச் சிறப்பாக நிகழ்ந்தது.

அமைப்பாளர்களில் ஒருவரான தொழிலதிபர் திரு. ஆர் எம். சேது வரவேற்றுப் பேசினார். விழாவிற்கு பிரின்ஸிபல் மாவட்ட செசன்ஸ் நீதிபதி திரு. எஸ். பிரதாப்சிங் தலைமை வகித்துப் பாராட்டிப் பேசினார்.

அவரைத் தொடர்ந்து தொழிலதிபர்கள் திரு. லெ. நாராயணன் செட்டியார், கரு முத்து திரு. தி. கண்ணன், அரிமா மாவட்ட ஆளுநர் திரு. ஆர். குருமூர்த்தி, மதுரை தமிழ்நாடு வணிகக் கழகத் தலைவர் திரு. ஜெட்டலால் சோலங்கி, பாண்டியன் ஓட்டல் நிர்வாக இயக்குநர் திரு. பி. சி. எம். சுந்தரபாண்டியன், ஸ்ரீ கற்பகாம்பாள் மில்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. ப. லெட்சுமணன், சண்முகர் மில்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. டி. ஆர். தினகரன், மீனாட்சி திரு மைந்தன் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

சிறப்பு விருந்தினர் திரு. சுப. சபாபதிக்கும் அவரது துணைவியாருக்கும் அமைப்பாளர்களில் மற்றொருவரான தொழிலதிபர் திரு. எஸ்பி. அழகப்பன் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்துச் சிறப்பித்தார்.

திரு. சுப. சபாபதி ஏற்புரை வழங்கினார். திரு. எஸ்பி. அழகப்பன் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

விழாக்குழு சார்பாக தலைமையேற்றுச் சிறப்பித்த நீதிபதி திரு. எஸ். பிரதாப் சிங்குக்கும் சிறப்பு விருந்தினர் திரு. சபாபதிக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

விழாவில் பங்கு பெற்றோருக்கு இரவு விருந்தும் வழங்கப் பெற்றது.

பாரதியார் விழா: குழந்தைகள் நிகழ்ச்சி

பாரதி தமிழ்ப்பணி இயக்கத்தின் சார்பில் பாரதியார் விழா - குழந்தைகள் நிகழ்ச்சி 25-12-89 அன்று காரைக்குடியில் திரு. அரு. சோ இல்லத்தில் நிகழ்ந்தது. ''காசிஸ்ரீ'' திரு. அரு. சோமசுந்தரன் விழாவிற்குத் தலைமை தாங்கினார். காரைக்குடி அமைப்பாளர் திரு. சி. இராமசாமி வரவேற்றார். தமிழாசிரியர் பழ. கணேசன், விஞ்ஞானி இராகவன் டாக்டர் அப்துல்லா பேராசிரியர் கதி. கணேசன் ஆகியோர் உரையாற்றினர். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் மகள் தேவி நாச்சியப்பனின் மேற்பார்வையில் குழந்தைகள் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. தேவிக்கு நீலா சோமசுந்தரன் பொன்னாடை போர்த்தினார். வள்ளியம்மை வயிரவன், மங்கையர்க்கரசி மீனாட்சி, சோலையப்பன் ஆகியோர் பக்திப் பாடல்களைப் பாடினர்.

சதாபிஷேக விழா

ஒக்கூர் திரு. ஆத. முரு. பழ. பழநியப்ப செட்டியார் - திருமதி விசாலாட்சி ஆச்சியின் சதாபிஷேக விழா 18-1-90 அன்று பிள்ளையார்பட்டியில் சிறப்பாக நிகழ்ந்தது. விழாவிற்கு வந்தவர்களை திரு. பழ. ஆதப்பனும் ஆடிட்டர் திரு. பழ. நாராயணனும் வரவேற்றனர்.

ஆர்வமிக்க மாணிக்கம் செட்டியார்!



மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதிக்கும் முனைவர் திரு. தமிழண்ணலுக்கும் மதுரை நகரவிடுதியில் 29-1-90 அன்று பாராட்டு விழா நடைபெற்றது. அப்போது பாகனேரி வெ. வெ. கரு. வே. மாணிக்கம் செட்டியார் அவர்கள் தாம் பாகனேரி, நாட்டரசன்கோட்டை, கொ. அழகாபுரி, அலவாக்கோட்டை, சொக்கநாதபுரம் ஆகிய ஊர்களில் மதுரை நகர விடுதியின் புதிய கட்டிடத்திற்கு நன்கொடை வசூலித்து வந்திருப்பதாகத் தெரிவித்து ஒரு பையை சிறப்பு விருந்தினர் திரு. சபாபதி கையில் கொடுத்து அதில் உள்ள ரொக்கத்தை எண்ணி அங்குள்ள கட்டிட நிதி உண்டியலில் போடுமாறு கேட்டுக்கொண்டார்கள். அதுபோல் மதுரை வங்கியின் தலைவரும் எண்ணி உண்டியலில் போட்டார்கள். அந்தத் தொகை ரூ. 6111-00 ஆகும். இதுபோல், தான் மேலும் நன்கொடை வசூல் செய்து தருவதாகவும் மற்றவர்களும் தாராளமாக நன்கொடை அளித்து விரைவில் விடுதி கட்ட ஆவன செய்து உதவவேண்டுமெனவும் மாணிக்கம் செட்டியார் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் ஆர்வத்தையும், விடா முயற்சியையும் அங்கிருந்தவர்கள் பாராட்டினர்கள்.

நகரத்தார் சங்கங்களுக்கு ஓர் வேண்டுகோள்!

நகரத்தார் சமூக முன்னேற்றத்திற்கு ஆங்காங்குள்ள நகரத்தார் சங்கங்கள் சிறப்பான முறையில் செயலாற்றி வருகின்றன. எனினும் நகரத்தார்கள் பல இடங்களில் தொழில் காரணமாக வசித்து வருவதால் ஒன்று சேர முடியாமல் இருக்கிறார்கள். எனவே ஆண்டில் ஒரு முறை மதுரையிலோ, திருச்சியிலோ, காரைக்குடியிலோ மூன்றுநாள் மாநாடு ஒன்றை நடத்தி அதில் கலைநிகழ்ச்சி, கண்காட்சி போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்தால் நகரத்தார் சமூக முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியாயிருக்கும். கண்காட்சியில் நகரத்தார் பெண்களின் ஒப்பற்ற கைவினைப் பொருள்களைக் காட்சிக்கு வைக்கலாம். விற்பனைக்கும் ஏற்பாடு செய்யலாம். சிறு தொழில் பற்றிய ஆலோசனைகள், வேலை வேண்டுபவர்கள் பதிவு செய்து கொள்ளுதல், திருமணம் சம்பந்தமாகப் பெற்றோர்களிடையே அறிமுகம் ஏற்படல் போன்ற பலவற்றிற்கும் இத்தகைய மாநாடுகள் தேவை. அச்சமயம் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடலாம். அதில் நகரத்தார் சங்கங்களின் சாதனைகளைப் பற்றியும், நகரத்தார்களின் அறப்பணிகள், தொழில்கள் பற்றியும், சமூகப் பணிகள் பற்றியும், கட்டுரைகள், செய்திகளை வெளியிடலாம்.

எனவே இத்தகைய மாநாடு 1990 ஆம் ஆண்டு மே மாதம் முதல்வாரம் நடைபெற ஏற்பாடு செய்யுமாறு நகரத்தார் சங்கங்களின் தலைவர்களைப் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

இப்படிக்கு
வெ. நாராயணன், காரைக்குடி

இயற்கை எய்தினுர்

மேலைச்சிவபுரி மாணிக்கம் செட்டியார் அவர்களின் துணைவியார் திருமதி சொர்ணம் ஆச்சி அவர்கள் சிறிது காலம் உடல் நலமில்லாமல் இருந்து மேலைச் சிவபுரி தமது இல்லத்தில் 2-1-90 காலை 5-35க்கு இயற்கை எய்தினுர்கள். இவர்களுக்கு காந்திமதி ஆச்சி. ராஜாமணி ஆச்சி என இருபுதல்விகளும் திரு. முத்துராமன் (புலவர் மாமணி) என்கிற புதல்வரும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

ஃ ஃ ஃ

நடராஜபுரம் திரு. எஸ். சிந்தாமணி செட்டியாரின் (தலைமை ஆசிரியர், தாகூர் நடுநிலைப் பள்ளி, அரண்மனை சிறுவயல்) புதல்வன் சி. இராமு என்ற பூங்குன்றன் B. E. (Mechanical) தமது 22 ஆவது வயதில் 29-10-89 அன்று இயற்கை எய்தினுர்.

மேலைச்சிவபுரி

அ. பழ. சொ. காலமானுர்

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் பழைய மாணவரும் சிறந்த காந்தியவாதியுமான ஆ. பழ. சொ. சொக்கலிங்கம் செட்டியார் 17-1-90 அன்று தம் 82 ஆம் வயதில் விழுப்புரத்தில் காலமானுர்.

அவர் பர்மாவில் கம்பை உயர்நிலைப் பள்ளியைத் துவக்கிய முன்னுேடிகளில் ஒருவர். அறிஞர் வே சாமிநாதசர்மா. கம்பன் அடிப்பொடி போன்ற பெரியோர்களோடு நெருங்கிய நட்புத் தொடர்பு உடையவர். சென்னையில் 'தமிழ்ப்புத்தகாலயம்' என்ற நூல் வெளியீட்டு நிறுவனத்தை கண. முத்தையா அவர்களோடு தொடங்கியவர். 50 ஆண்டுகளுக்கு முன் நகரத்தார் சீர்திருத்தம் பற்றி அவர் எழுதிய கவிதைகள் நூலாக வெளிவந்துள்ளன. ஏ. கே. செட்டியாருடன் குமரி மலரில் பல ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். கொப்பனுபட்டி கலைமகள் கல்லூரியில் நம் பெண்கள் கல்வி வளர்ச்சிக்கு பல ஆண்டுகள் தொண்டு புரிந்தவர். அண்மையில் கம்ப இராமாயணத்தை ஊன்றிப் படித்து அதில் சுவைமிக்க 3000 பாடல்களைத் தொகுத்து வைத்துள்ளார். வாழ்நாள் இறுதி வரை தமிழிலும் சைவத்திலும் ஈடுபாடு கொண்டு காந்தியச் சிந்தனையோடு வாழ்ந்த சிறந்த சான்றேர் ஆவார்.

பம்பாய் பண்பாட்டுக் கழகம்

பம்பாய் பண்பாட்டுக் கழக உறுப்பினர்களின் குடும்பச் சந்திப்பு நிகழ்ச்சி பம்பாய் கோரேகான் அருகில் உள்ள ஆரேபால் பூங்காவில் 10-12-89 காலையில் நடைபெற்றது. மதிய உணவிற்குப்பின் அனைத்துத் தரப்பாருக்கும் பலவிதமான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு கழகத்தின் தலைவர் திரு. கேஎம். வெங்கடாசலம் பரிசுகள் வழங்கினுர். விழா ஏற்பாடுகளை திரு. சி. சிதம்பரம் செய்திருந்தார்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணுபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என், சிதம்பரம்